மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol-XII. | Madras: August, 1910. | No-8.

புத்தகம் - கஉ. | சென்னப்பட்டணம்: ஆகஸ்டு மீ 1910. | இலக்கம்-8.

ஞானியருலகு.

என்னே வுலகம்! என்னே வாழ்க்கை!
மின்னே போலும் மிரட்டியே மறைவுறும்,
நின்று ளிருந்தான் கிடந்தா னெனுஞ்சொல்
லொன்றே யுறுதி யுடையது மாந்தர்
சகல ஜீவர்க்குளும் சால்புடைத் தாவரை
அகளவே நோக்கில் அவர்கதி யென்னும்!
பொருளே படைக்கிற் போற்றுவர் தலைமிசை,
அருளோ யிலையிலை, அன்போ வெறும்பொய்
தன்னய வின்பமே சகலரும் வழிபடும்
உன்னதத் தெய்வம், உயர்ந்தோர் பேதையர்
கட்கொலை காமங் களவுபொய் யேபுலை
முட்களே நிறையிருள் மூடிய வனாந்திரம்,
ஐம்புல னெழுப்பும் ஆசையும் பசியும்
பைம்புலத் தறிவினைப் படிப்படி மேயும்,
நித்திரை சொப்பன நிழலே திரண்டு
சித்த வேதனைபுரி செந்து நன்காடு.
நாமமே யழிபடத் தாபமே சுரக்குங்
காயவெவ் வனலுங் கோபவெஞ் சூறையும்,
மதமெனும் புலியும், மயலெனு மரவும்,
விதமெலாம் பரவும். வெட்டியில், சுயமை
மருவுமாச் சர்யக், குழியுமே நிறையும்,
நெடுங்குகை லோபமும் நிணந்தினுங் கழுகுப்
பொறாமையுஞ் செறியும். பொய்க்கமர் பொருந்துந்
தராதல மன்றோ தரணி வெம்பாலை!
என்னே மதிகள்! என்னே மொழிமுறை!
நன்னேர் விரோதம் நவிலுவ ருலகினில்!
தரையினிற் சிறந்த சதமிலை யெனவே
அறைகுவர் பலரும், அஃதுகொ ளுண்மை
விழுங்குவான் சுரையும் வீட்டுவான் புனலும்

புழுக்குவான் அனலும் புயமது தட்டி
ஆர்கலி செய்து அதுவே தொழிலதாய்
யோர்சலிப் பின்றி யுசாவியே நிற்கும்,
காற்றினின் மிக்க வாற்றலு முளதோ ?
சேற்றினி லுதிக்குஞ் சிறுநொடிக் குமிழி
மானிட ரென்னே மகத்துவங் கொண்டார் ?
ஆனியே யுடலம் ஆனியே யகமும்,
தேகமோ வூன்கொடு சொய்பொதி, ஊழல்
யூகமே யல்லது உள்ளறிந்தா ரெவர் ?
எத்தனை நிரப்பியு மெளும்நிறை வில்லாப்
பொத்தலைக் கொண்ட பொய்த்தோற் றுருத்தி,
நாற்றமும் கழிவும் நாவினு லெழுத்தாற்
சாற்றவும் படுமோ? சரீரமே யென்று
வாசனைத் திரவியம் பூசியும் மகிழுவர்,
யோசனை யிழந்திவர் வேதனைப் படுவரேல்
எண்பறி கொடுத்துவே றெங்ஙனஞ் செய்குவர்
கண்ணிணை யிழந்தவர் காண்டலு மெங்ஙனம் ?
மாந்தரை மயக்கியே மடையரா யொழுகுவான்
போந்ததீம் புத்தியைப் புகட்டிய வியற்கையை
நோவோங் கொல்லோ நொடிப்போங் கொல்லோ
சாவோங் கொல்லோ? ஜன்மமே முதலிடை
கடையெனு மூன்று கண்டமுங் கண்டமா
யடையு மாறளித்த தாரெனுங் சங்கையை
யுன்னியே நின்று உழைப்பவ ரனந்தம்,
என்னினு முண்மையை எவரறிந்தார்? பிணி
கோடியே சூழ்ந்திக் குவலயஞ் சிதைத்தும்
நாடியே வாழ்வினை நண்ணுவர் ! மடமை
யித்தனை தானோ? இடர்மயக் ககல
வெத்தனை வேண்டும்? இயம்புதுஞ் சிறிது,
நட்பெனப் படுவதொர் சொற்சிறப் பன்றிக்
கட்புல ஞமோ? கைப்பொரு ளிருப்பின்
நெய்க்குடஞ் சுற்றும் ஈடொகை யெறும்பாய்ப்
பொய்த்துதி செய்குவர் போற்றுவர் சிரிப்பர்,
பொருளது நீங்கிலோ இருளுவர் முகத்தில்,
அருளு முகமனும் அகலவே பிரியும்,
நட்பெனுந் தகைமையை நவின்றனம், காதற்
பெட்பினை நோக்குவம், பேதமை பெரிதே !
பெண்டிரின் சலனமும் புருடரின் சுயநலங்
கண்டவர் கொள்வரோ காதலி னுண்மையை
காதலை நிமல வூற்றெனக் கழலுவர்
ஓதலும் நகைக்கு உரியதே, அந்தோ !
பெருமுயற் கொம்பும் பேடியின் வீரமும்
இருவர்தம் பொருமையு மிணையுமே தம்மில் !
ஆதலினு லகம் அனைத்துமே கொடிய
வேதனை யாகும். மெய்யினைக் கென்னெ

அருளெனு மொன்றே யனைத்தையு மாக்கும்
மருளிலாச் செல்வம். மாந்தரி னிதயத்
தண்மையிற் றோன்றித் தழைத்திடும், முறுவல்
அண்மையிற் பூக்கும். ஆனந் தக்கனி
வேண்டிய பழுக்கும். வேண்டியர்க் குதவும்
தாண்டுவான் றுயரச் சாகரந் துடைக்கும்,
இத்துணை மாண்பு மெய்திய தாகலின்
அத்தினை வளர்மின் அறத்தினைக் கொண்மின்
முத்தியு மிஃதே, முடிவிலா நிமலன்
சத்தியு மிஃதே, சகலரும் நோய்சா
தரித்திரம் பகையிவை தரித்திரா ருலகில்
உரித்தே யுயரும், உண்மையே சிறக்கும்,
கேடு துன்பங் கெடும், பகவானடி
நாடும் நம்மனம், நாடியர் வாழி.

☞ வி. எம். கலியாணசுந்திரம், பி-ஏ.

1-ஆவது சர்க்கில் இன்ஸ்பெக்டர் துரை அவர்கள் எலிமெண்டரி பாடசாலைகளுக்காகவும் அப்பாடசாலை உபாத்தியாயர்களின் உபயோகத்திற்காகவும் "பாடசாலைத்தோட்ட" விஷயத்தைப்பற்றி அனுப்பிய

சர்க்குலர்.

14. தோட்டவேலைக்குச் சம்பந்தமான பரீக்ஷைகள்:—

(1) தயார் செய்யப்பட்ட நிலத்திலும் தயார் செய்யாமலிருக்கும் நிலத்திலும் விதைத்தல்.

(2) களிமண் நிலத்திலேயும் மணல் நிலத்திலேயும் சவுள் நிலத்திலேயும் பயிர் வைத்தல்.

(3) உப்பு, மண், எரு, எலும்பு, சாம்பல், சவுள்மண் முதலிய வெவ்வேறு எருக்கள் போட்டு வளர்த்தல்.

(4) உப்பைச்சேர்த்து இலையை ஏராளமாய் வளராமல் செய்தல்.

(5) பிறகுபிரகிருதிசாஸ்திரங்கள் விருத்தியாகும்பரீக்ஷைகள்செய்தல்.

15. பிரகிருதி சாஸ்திர பாடங்கள்:—

(a) சூட்சுமமான தண்டு குழாய்களின் வழியாய் ஜலபதார்த்தங்கள் பூமியிலிருந்து மேலுக்குப் போகும் விதம் தெரிவிக்கவேண்டும்.

(b) ரசவாத சாஸ்திரம்:—வாயுவிலிருக்கும் வஸ்துக்கள், மரங்கள் காற்றை உட்கொள்ளுவதும் வெளிப்படுத்துவதும் பொருள்கள் நீரில் அழுகல், கரியமலவாயு (Phosporous) உப்பு பதார்த்தங்கள், ஜலத்தில் கரையும் பதார்த்தங்கள், கரையாத பதார்த்தங்கள் இப்படிப்பட்டவைகளைப் பாடங்கள் கற்பிக்கவேண்டியது.

(c) ஜீவசாஸ்திரம்:—வியாதி பூச்சிகளை நைட்ரிஜன் என்னும் காற்று எப்படி உட்கொள்ளுமோ அதைப்பற்றி கற்பிக்கவேண்டும். இவ் விஷயமாய் மங்களூர் பேஸல் மிஷனர் போட்டிருக்கும் இந்த தேசத்தின் விருக்ஷ சரித்திரத்தைப் பார்க்கவேண்டியது.

(d) விருக்ஷசாஸ்திரம்:—முளை எடுப்பதும் அவ்வேலைக்குதவும் ஸ்திதியும், செடியின்பாகங்கள், அநேகவிதமான வேர்கள் அடிமரங்கள்வேர்களின் மயிர்க்கால்கள்,அவைகளின் பயன். இலைகள்,கொழுந்துகள், ஒற்றையிலைகள், கும்பலான இலைகள்,நானுவிதமான இலைகள்,இப்படிப்பட்டவைகளைப்பற்றியும், செடிகளுக்கும் அவைகளுக்கு அக்கம்பக்கத்திலுள்ளவைகளுக்குமுள்ள வித்தியாசத்தைப்பற்றியும், வேர்கள் இலைகள் இவைகளின்பயனும், புஷ்பங்களின் பாகங்கள் அவற்றின் பயனும், வளர்க்கப்பட்ட புஷ்பங்களும் பழங்களும்,வளர்க்கப்படாத புஷ்பங்களும் பழங்களும் இப்படிப்பட்டவைகளைப் பற்றியும் பாடங்கள் கொடுக்கவேண்டியது.

முளைகளிலேயே, ஜாதிகளை வெவ்வேறு படுத்தல். ஒற்றையிலைப்பயிர், இரட்டையிலைப்பயிர், வருஷப்பயிர், இரண்டுவருஷப்பயிர் சாஸ்வதப்பயிர், எப்பொழுதும் பச்சையாயிருக்கும் பயிர், சீக்கிரத்தில் இலைகள் விழுகிறவை இபபடிப்பட்ட விஷயங்களினும் கண்ணுக்குத் தோன்றும் விஷயங்களின் லக்ஷணங்களை வாயுமூலமாயும் பூச்சிகள் மூலமாயும் மனுஷர் மூலமாயும் பலன்கள் ஆகக்கூடியவை. ஸ்திரீ புருஷ அங்கங்கள் ஒன்றுயிருப்பவை. அதுகள் வெவ்வேறுயிருப்பவை. ஸ்திரீ புருஷ அங்கங்கள் இல்லாமலிருப்பவை. புஷ்பங்கள் விதைகள் இவைகளின் விருத்தி — விருக்ஷ சாஸ்திரத்தில் கொடுக்கபபடும் பாடங்களெல்லாம் தோட்டத்திலேயாவது தோட்டத்தின் வெளிப்புறத்திலேயாவது, கற்பிக்கவேண்டியது. அப்படிப்பட்ட பாடங்கள் கற்பிக்கும்பொழுது பிள்ளைகள் ஆராய்ந்து அம்ஸங்களை அறியவேண்டியது. அக்கம்பக்கத்திலுள்ள சுபாவ விஷயங்களை பரிசோதிக்கும்படி மாதிரி ஏற்படவேண்டியது.

16. பூச்சிகளும் அவற்றைக் கொல்லும் விதமும், பயிர்களை நாசஞ் செய்யும் பூச்சிகள் நோய்கள் இவைகளின் விருத்தாந்தமும்.

இவைகளுக்கு சொல்லப்பட்டிருக்கும் சம்ஹாரமார்க்கங்கள். அதாவது குயவன் சாம்பல் சுண்ணாம்பு புகையிலை ரஸம், கிரஸின் எண்ணெய் சவுக்காரத்தண்ணீர் (சப்பு) முதலியவற்றை உபயோகித்தல். (இந்தியா துரைத்தனத்தாருடைய தரப்பில் "மாகஸியல்" துரை அவர்கள் எழுதிய பூச்சிகள் என்கிற புத்தகத்தில் அதிக உபயோகமுள்ள விருத்தாந்தங்கள் இருக்கின்றன.) இப்படிப்பட்ட பூச்சிகளினுடைய ஜீவ சரித்திர விஷயங்களைப்பற்றி பாடங்கள் சொல்லவேண்டியது.

17. ஒவ்வொன்றுக்குமுள்ள சம்பந்தம் கீழ்வகுப்பில் தோட்டத்து பாடங்களைக் கணிதத்துடன் சம்பந்தப்படுத்தி கற்பிக்கவேண்டும். மேல்வகுப்புகளில் இப்பாடங்களை சாதாரண கணிதத்துடனும் க்ஷேத்திர கணிதத்துடனும் வரவு செலவு கணிதத்துடனும் சம்பந்தமாகும்படி கற்பிக்கவேண்டும். ஸ்கேல் டிராயிங்கும் பொருளைப்பார்த்து எழுதும் சித்திரமும் தோட்டத்திற்குச் சம்பந்தப்பட்டதாய் இருப்பது நல்லது.

18. பிள்ளைகளுக்கு வேலையை நிர்ணயித்தல் — இரண்டாவது வகுப்பு முதல் நான்காவது வகுப்புவரையில சாதுரியமாய் செய்யக்கூடிய வேலையை பங்கிட்டு வைக்கவேண்டும். சிறு பிள்ளைகளைக்கொண்டு இலைகளைக் கிள்ளுதல், களை பிடுங்குதல், தண்ணீர் ஊற்றல் முதலிய வேலைகளைச் செய்வித்துப் பெரியபிள்ளைகளுக்குச் சகாயமாயிருக்கும்படி செய்யவேண்டும்.

19. தினசரி புஸதக மெழுதல — இதை தினந்தோறும் பிள்ளைகள் எழுதவேண்டும். இந்தப் புஸ்தகம் நான்கு பாகமாய் இருக்கலாம்.

1. வரவு செலவு. 3. கையேடு, (சிட்டா)
2. அடங்கின விஷயங்கள். 4. வேலையின் விவரம்.

வரவு செலவு கணக்கில் பிள்ளைகளும் உபாத்தியாயரும் அனுபவித்த பலன்கள் முதலியவற்றை எழுதவேண்டும்.

இரண்டாவது அம்சத்தில் சிட்டாவிலுள்ள விஷயத்தைச் சுருக்கமாய் எழுதவேண்டும்.

சிட்டாவில் ஒவ்வொரு பயிரின் ஜாதி, பயிரின் மொத்தம், நட்டதேதி, முளைகளை பரீக்ஷித்தல், அடைந்த நஷ்டம், மொக்கும் பூவுமிட்ட தேதி, பலனுக்குவந்த தேதி முதலியவற்றை எழுதவேண்டும். வேலை விஷயங்களில் பாத்திகள் கட்டச் செய்தல் அல்லது ஏற்படுத்தல், நாற்று நடல் முதலிய விஷயங்கள் இருக்கலாம்.

ஓர் நாயின் அறிவு.

ஒருநாள் ஈடன் என்னும் துரையொருவர் குதிரைச் சவாரி போனபோது தன்னுடன் கொண்டுபோயிருந்த கம்பளியை எங்கேயோ இழந்துவிட்டார். அதை அவர் வீட்டுக்குத் திரும்பி வருவதற்குமுன் கவனிக்கவில்லை. இது இப்படியிருக்க, அன்று காலையில் அவருடைய நாய் எங்கெங்கோ திரிந்துவிட்டு அதிர்ஷ்டவசமாய் அந்தக்கம்பளி விழுந்துகிடந்த வீதியில் நுழைந்தது. அது அந்தக் கம்பளியைப் பார்த்தவுடன் தன் எஜமானனுடையதென்று அறிந்து, அதனருகிலேயே உட்கார்ந்துகொண்டு எஜமானனுடைய வரவை யெதிர் பார்த்துக்கொண் டிருந்தது. அது அன்றெல்லாங் காத்திருந்தும் எஜமானன் வரவில்லை. அதனிடத்திலிருந்த கம்பளியைப் பறித்துக் கொள்ளும்பொருட்டு, அதற்கு இறைச்சித் துண்டுகள் முதலிய தின்பண்டங்களைக் கொடுப்பது முதலான வழிப்போக்கர் செய்த தந்திரங்களுக்கெல்லாம் அது இடங்கொடுக்காமல் வெகு நேரம்வரையில் காத்திருந்தது. பிறகு அவ்வழியாய்ச் சென்ற ஈடன்துரையின் சிநேகித ரொருவர் அந்த நாய் தம் சிநேகிதருடைய தென்றறிந்து அவர்வந்து தம் கம்பளியை யெடுத்துக்கொண்டு நாயையு மழைத்துக்கொண்டு போனார்.

பார்ன்ஸ்லே என்னுமூரில் துரையினுடைய ஆறுவயதுள்ள குழந்தையொன்று பந்து விளையாடிக்கொண் டிருக்கையில் அப்பந்து அருகிலிருந்த தண்ணீர்த் தொட்டியில் விழுந்தது. அதை யெடுக்கச்சென்ற அக்குழந்தையும் அதில் விழுந்து தத்தளித்துக் கொண்டிருந்தது. அருகிலிருந்த ஒரு நாய் அதைப்பார்த்து அத்தொட்டியில் மூழ்கி யக்குழந்தையின் கையைத் தன் வாயில் கௌவிக்கொண்டு கரைக்கு இழுத்துக்கொண்டு வந்தது. நாய் தண்ணீரில் குதித்த சப்தத்தை அண்டைவீட்டுக் கூரையின்மேல் கொல்லத்து வேலை செய்துகொண் டிருந்தவன் கேட்டுக் கீழே இறங்கிவந்து பார்க்கையில், நாய் குழந்தையை இழுத்துக்கொண்டு வருவதைப் பார்த்தான். அவன் அக் குழந்தையையும் நாயையும் துரையினுடைய வீட்டிற் கழைத்துக் கொண்டுபோய் நடந்த சங்கதிகளைச்சொல்ல, அத்துரை அந்த நாயின் நற் செய்கைக் கறிகுறியாக அதற்கு ஒரு வெள்ளிக் கழுத்துப்பட்டை செய்து அதில் இந்தத் தீரமான செய்கையையும் பதித்தெழுதி அதன் கழுத்தில் கட்டிவைத்தார்.

ஜப்பானிய ஸ்திரீகள் அநுசரிக்கும் விதிகள்.

ஜப்பானில் பெண்மணிகளுக்கு விவாகமானவுடன் அவர்கள் தாய்மார்கள் தங்கள் புத்திரிகள் சுகமாக கணவருடன் வாழ்ந்துவரவும், எப்பொழுதும் தம்பதிகள் மனச் சந்தோஷத்துடனிருந்து வரவும் தக்க புத்தி புகட்டி வருகிறார்களாம். அவை பின் வருமாறு:—

1. உனக்கு விவாகமாய்விட்டது. இனி நீ என் குமாரத்தியல்ல. ஆனால் உனது மாமனார், மாமியார்தான் உன் பெற்றோர்கள். நீ இதுவரையிலும் உன் தாய் தந்தையர்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்தமாதிரி அவர்களிடத்திலும் கீழ்ப்படிந்து நட.

2. உன் கணவன்தான் உனக்கு யஜமானன். தாழ்மையாயும் மரியாதையாயுமிரு. கணவனுக்குக் கீழ்ப்படிந்து நடத்தலே ஒருமனைவிசெய்யும் சிறந்த தர்மமாகும்.

3. உன் மாமியாரிடத்தில் எப்பொழுதும் சிநேகமாயும் அன்பாயுமிரு.

4. பொறாமையுள்ளவளாயிராதே; ஏனெனில், அத்துர்க்குணம் உன் கணவரின் பிரியத்தைக் கெடுத்துவிடும்.

5. உன் கணவர் தப்பிதம் செய்தபோதிலும் பொறுத்துக்கொண்டிரு. கோபம் கொள்ளாதே. அவர் கோபம் தணிந்தவுடன் மெதுவாகவும் பட்சமாகவும் அவருடன் பேசு.

6. அதிகமாகப் பேசாதே. அயலாரைப்பற்றி தூஷித்துப் பேசாதே. ஒருபொழுதும் பொய் சொல்லாதே. உண்மையைப் பேசு.

7. அதிகாலையில் எழுந்திரு; பகலில் தூங்காதே. உனக்கு வயது-50 ஆகும்வரையில் ஜனங்கள் கூடுமிடங்களுக்குப் போகாதே. அவ்வித சபைகளில் முக்கிய வேலையொன்றும் செய்யாதே.

8. குறி சொல்வோனைக் கூப்பிட்டு ஒன்றும் கேட்காதே.

9. கிருககிருத்யத்தில் நல்ல எஜமானியாயிரு. முக்கியமாய் உன் வீட்டு சிலவில் சிக்கனமாயிரு.

10. சிறுவர்களிருக்கும்படியான சபைகளுக்குப் போகாதே.

11. அழகு வாய்ந்த வஸ்திரங்களை யணியாதே. ஆனால் உனது உடுப்புகள் சாமான்னியமானதாகவும் சுத்தமானதாகவு மிருக்கட்டும்.

12. உன் தகப்பனார் செல்வத்தையோ, அந்தஸ்தையோ குறித்து கர்வப்படாதே. உன் தகப்பனார் தனவந்தராயிருந்தால் உன் கணவரது பந்துக்களுடன் அவரைப்பற்றி பேசவே பேசாதே.

☞ பத்திராதிபர்.

தாண்டவராயன்.

சுமார் மூன்னூற்றைம்பது வருஷங்களுக்கு முன் நம் இந்தியாவானது மகமதியரால் அரசாளப்பட்டு வந்தபொழுது, நாட்டில் பற்பல இடங்களில் திருட பயம் அதிகரித்திருந்ததென்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். அக்காலத்தில் தென்னிந்தியாவில் கொள்ளையடித்து ஜனங்களை அதிக உபத்திரவப்படுத்தினவர்களில் தாண்டவராயன் ஒருவன்.

அவன் அகன்ற மார்பும், பருமனை முழியும், கருத்தசரீரமும், நீண்ட கைகளும் உடையவன். சுமார் ஆறு அடி உயரமிருப்பான். அவன் உருவம் பார்க்கக்கூட அதிக பயங்கரமாயிருக்கும். அவன் பௌண்டரீகபுரத்தின் மலைச்சாரலில் வாசம் பண்ணிக்கொண்டிருந்தான். அவன் வருகிறானென்ற சப்தம் காதில் விழுந்த மாத்திரத்தில், ஜனங்கள் தம்மால் சுமந்து கொண்டு போகக் கூடிய அவ்வளவு கையிலெடுத்துக்கொண்டு மிகுந்ததைப் புதைத்து விட்டு வீடுவாசலை விட்டோடிப் போவார்கள்.

அப்பேர்ப்பட்ட திருடர் தலைவனை தாண்டவராயன் எப்படி மரணமடைந்தான் என்பதை பின்வரும் சிறியகதை நன்கு விவரிக்கும். சோழ நாட்டில் வரி வசூல் செய்வதற்காக டெல்லியில் அரசாண்டு வந்த மொகலாய அரசனால் ஏற்படுத்தப்பட்டிருந்த மகமத்கான் என்பவனிடம், தாண்டவராயனுடைய நாயகியாகிய பூங்காவனம் ஓர்கையில் ஈட்டியேந்தி, மற்றொரு கையில் மூட்டையுடன் எதிர்பட்டு பின்வரும் வரலாற்றைப் புகன்றாள்:—

"ஐயா, நான் ஈட்டியும் கையுமாய் வந்திருப்பதைக் கண்டு நீர் சற்றும் பயப்படக் கூடாது. நான் கள்வர் தலைவனின் கள்ள நாயகியா யிருந்தாலும் கூட தங்களுக்கு யாதொரு தீங்கையும் கோறி இங்கு வந்தவளல்ல. நான் சொல்லும் வறலாற்றை நிதானமாய்க் கேட்பீர்களாகில் நான் யாதுகாரணம் பற்றி இங்கு வந்தேனென்பதை நன்குணர் வீர்கள்.

சுமார் இரண்டு வருஷத்திற்குமுன் நான் என் கணவன் வீட்டில் சுகமே காலங்கழித்து வருகையில் அந்தப்பாபி தாண்டவராயன் எம்மூர்க்கு வந்து என் கணவனை இந்த ஈட்டியால் குத்திக் கொன்று, என்னையும் பலாத்காரமாய்த் தன்னிருப்பிடத்திற்குத் தூக்கிக்கொண்டு போனான். அவனுக்கு உடன் படுவதில் எனக்கு இஷ்டமே கிடையாது. ஆனாலும் அவன் உபத்திரவம் பொறுக்கமாட்டாமல்—என் தலைவிதி—அவனுக்கு உடன்பட நேரிட்டது.

ஏதோ தெய்வ கடாக்ஷத்தினால் எங்கள் இருவருக்கும் ஓர் ஆண் மகவு ஜெனித்தது. அக்குழந்தை பிறந்தது முதல் எங்களிருவருக்குள் அதிகநேசமுண்டாய் முன்னைவிட அதிக ஒற்றுமையும் உண்டாயிற்று. இப்படியிருக்கையில் ஒருநாள் இரவு தங்களுடைய சிப்பாய்கள் நாங்கள் வாசம் பண்ணிக் கொண்டிருந்த இடத்தைச் சுற்றிக்கொண்டார்கள். அச்சமயம் அமாவாசை காலமா யிருந்தபடியால் இருட்டு அந்தகாரமா யிருந்தது. வானம் மப்பாயிரு

ந்த படியால் நக்ஷத்திர வெளிச்சங்கூட இல்லை. எதிர் நிற்கிறவர்கள்கூட தெரியவில்லை. குழந்தையை எடுத்துக்கொண்டு, நாங்களிருவரும் ஒரு பள்ளத்தில் பதுங்கினோம். சிறிதுநேரம் கழிந்தபின் குழந்தைஅழ ஆரம்பித்தது. குழந்தையை என்னிடம் கொடுக்கும்படி கேட்டேன். குழந்தை அழுகுரலினால் நாங்கள் பதுங்கி யிருந்தஇடத்தைக் கண்டுபிடித்து-விடுவார்களே என்ற எண்ணத்தினால், என்னிடம் கொடாமல் கழுத்தை இறுகப் பிடித்துக் குழந்தையைக் கொன்று விட்டான்.

எங்குதேடியும் நாங்கள் அகப்படாமையினால் கொஞ்சநேரத்திற் கப்பால் சிப்பாய்கள் அவ்விடம்விட் டகன்றார்கள். நாங்களும் எங்கள் குகைக்குள் சென்றோம். அந்தப்பாபிக் குழந்தை இறந்ததைக்கொஞ்சங் கூடஎண்ணாமல் சுகமே நன்றாய்க் குறட்டைவிட்டுத் தூங்கினான். குழந்தை பரலோகஞ் சென்றதை நினைத்து நான் வருத்தப்பட்டுக் கடைசியாக அத்திருடனை என் புருஷனையும் குழந்தையையும் கொன்றதற்காகப் பழிக்குப்பழி வாங்கத் தீர்மானித்தேன்.

கடைசியாக நேற்றையதினம் அவன் வேட்டையாடி வந்த அலுப்புத் தீரும்பொருட்டு நன்றாய் அயர்ந்து நித்திரைசெய்கையில் இந்த ஈட்டியை எடுத்து, சாகும் பரியந்தம் அவனைக்குத்திக் கொன்றுவிட்டேன். தாங்கள் தாண்டவராயன் தலையைக்கொய்துகொண்டு வருபவர்க்கு பரிசளிப்பதாய்ப் பிரசுரித்திருந்தபடியால் நானே அவன் தலையை வெட்டி இச்சிறுதுணி மூட்டையில் கொண்டுவந்தேன். இதோ பாரும்'' என்று சொல்லி மூட்டையை யவிழ்த்துத் தாண்டவராயன் தலையை வெளியில் வைத்தாள்.

இப்பொழுது அவன் காலஞ்சென்று விட்டபடியால் அவன் கூட்டமும் கலைந்துவிடுமென்று நம்புகிறேன்.

டக்லமாகன் பாலைவனம்.

"இந்தியாவில் பேர்போன காஷ்மீர் தேசத்துக்கு வடக்கேயுள்ள கீழ் துருக்கி ஸ்தானத்தில் டக்லமாகன் (*Taklamakan*) என்ற ஒரு பாலைவனம் உண்டு. அது 93 ஆயிரம் சதுரமைல் விஸ்தீரணம் உள்ளதாய், ஒரே மணற்காடாய், உஷ்ண காலத்தில் நெருப்புப்போல் எரிவதாய் குளிர்காலத்தில் மகா சீதளமான காற்று வீசுவதாயுள்ள பிரதேசம். இந்தப் பாலைவனம் ஒரு காலத்தில் சமுத்திரமாயிருந்தாகச் சொல்லப்படுகிறது. எந்தக் காலத்தில் அப்படி சமுத்திரமாயிருந்ததோ எத்தனை யுகங்களுக்கு முன்னாலோ, அறிந்துசொல்லி யிருப்பவர் இல்லை. ஆனால், அப்படி ஒரு காலத்திலிருந்ததற்கு அடையாளங்கள் சந்தேகமில்லாமல இருக்கின்றன வென்று பூமி சாஸ்திர விற்பன்னர்சொல்லுகிறார்கள். சமுத்திரம் மேடிட்டுப் பாலைவனமான பிறகும் அங்கங்கே சில ஜீவநதிகள் ஓடுவதால் செழிப்பான சிற்சில பிரதேசங்கள் இருக்கின்றன. இருந்து அழிந்துபோனவைகளும் காணப்படுகின்றன."

சர்வஜித்.

27-வது அத்தியாயம்.

நாம் காட்டுஸ்திரீயின் சஞ்சாரங்களை இப்பொழுது கவனிக்கவேண்டியதாயிருக்கிறது. ஆழ்ந்த இருட்டறையிலிருந்துவந்த சங்கிலியோசையின் இரகசியத்தை யறிந்துவிட வேண்டுமென்று மனதை தீர உறுதி செய்துகொண்டாள். கோட்டையின் அஸ்திவாரத்திலுள்ள கிடங்குகளிலொன்றில் யாரோ ஒரு கைதியோ, அல்லது பல கைதிகளோ, அடைபட்டு சீரழிந்துகொண்டிருக்க வேண்டுமென்று சந்தேகித்து சாயந்திரம் முழுதும் தன்னறையிலேயே கார்த்திருந்து, மலையதிபதிகள் தங்கள் பரிவாரத்தோடு வெளியே அகன்றவுடன், தக்கசமயம் வாய்த்ததென் றெண்ணி தானும் எழுந்து கோட்டையின் பிராகாரத்தைச் சுற்றிக்கொண்டு வருகையில் கையில்விளக்கைப் பிடித்துக்கொண்டு கொத்துசாவியுடன் வருகிற வீரனைச் சந்தித்தாள். உடனே அவள் "வீரா, இந்நிசியில் இவ்விடத்தில் என்ன செய்கிறாய்" என்று கேட்டாள். "எனது எஜமானர்களின் ஆக்ஞைகளை நிறைவேற்றுகிறேன். நீ அம்மா, இத்தருணத்தில் தூங்கவேண்டியிருக்க வெளியே என்ன செய்கிறாய்?" என்று வீரன்திருப்பிக் கேட்டான். "தூக்கமா? நிர்பாக்கியனான ஒரு கைதி இங்கே சீரழிந்துகொண்டிருக்கும்போது எனக்குத் தூக்கம் எப்படிவரும்?" என்று கம்பீரமாய்க் கேட்க, அவன் உடல் நடுங்கி, "என்னம்மா நீ சொல்வது ஒன்றும் விளங்கவில்லையே" என்றான். வீரனுக்கு இந்தஸ்திரீயிடத்தில் அச்சம் அதிகம் என்று முந்தியே சொல்லியிருக்கிறோமல்லவா? அவளுடைய கண்கள் ஜ்வலித்துக்கொண்டு பார்க்க பயங்கரமாயிருந்ததால், அவள் பெரிய சூனியக்காரியென்றும் அவளுக்கு அகாதசக்திகளுண்டென்றும் எண்ணியிருந்தான். இதையெல்லாம் அறிந்த அவள், மஹா உறுதியைக் காட்டும்படியாகவும், கம்பீரமாகவும், "நான் சொல்வது யாதெனில், நீ செல்லுகிற இடத்திற்கு என்னையும் கூட்டிச்செல்ல வேண்டுமென்பதே" என்றாள். அதற்கவன், "முடியாது, முடியாது, நான் அப்படிச்செய்தால் என்தலை போய்விடும்" எனவே, அவள் தனது இரண்டு கண்களையும் உருட்டி விழித்து அவன் பயப்படும்படி உற்றுப்பார்த்து, அவனை அதட்டி, "வாயைமூடு; என் விருப்பத்திற்கு மீறி நடந்தால் உன்னை ஹதஞ்செய்து விடுவேன். ஆகையால், ஜாக்கிரதை. முன்னே செல். தயங்காதே" என்று மிரட்டவே, வீரன், "அம்மா, நீ என்னை ஹதஞ்செய்துவிடுவதாகச் சொல்லுகிறாய்; நான் உன்சொற்படி நடந்தால் என் எஜமானர்கள் என்னைக்கொன்று விடுவார்கள். நான் யாருக்கு பயப்படுகிறது?" என, அவள், "அவர்களுடைய கோபத்திலிருந்து உன்னைக்காக்க எனக்குத் திறமையுண்டு. என் சொற்படி நடந்தால் உனக்குப் பூரணாயுளும், அளவற்ற தனமும் சகல பாக்கியங்களும் கிடைக்கும். எனக்கு விரோதமாய் நடந்தால் இன்னும் ஆறு நாட்களில் சாவாய்" என்றாள். அவன் "ஐயோ" வென்று நடுங்கி, "அம்மா அப்படிச்செய்யாதே. இதோ உன்னிஷ்டப்படி நடக்கிறேன்" என்று வீரன்முன் செல்லவே, நமது ஸ்திரீயும் காரியம் அவ்வளவு சுளுவாய் கைகூடினதைப்பற்றி சந்தோஷித்து பின்சென்றாள். அவ்விருவரும் ஒரு வாசற்படியைத் தாண்டி கீழேசெல்லுகிற ஒரு கல் மச்சுப் படிக்

கட்டின் உயரவந்தார்கள். வந்தவுடன் கதவை பின்புறமாகச் சாத்திவிட்டு மெத்த ஜாக்கிரதையுடன் கீழே இறங்கிக்கொண்டு வழிகாட்ட அந்தஸ்திரீ பின்தொடர்ந்தாள்.

இப்படி இறங்குகையில் கீழேயிருந்து உயர வருகிறதாயும் கடுந்துக்கத்தைக் காட்டுகிறதாயுமுள்ள அழுகைக் குரலைக் கேட்டாள். இப்புலம்பல்கள் அசைக்கப்பட்ட சங்கிலிகளின் சத்தத்தோடு கலந்திருந்தன. அப்போதப்போது காற்றும் வீசிக்கொண்டு உயரவந்தது; அச் சமயங்களில் வீரன் விளக்கைக் கையால் அணைத்துப் பிடித்துவந்தான். ஆனால் இப்படிச் சுத்தமானகாற்று எங்கிருந்து வீசிவரக் கூடுமென்று அவள் எண்ணிக்கொண்டு வருகையில், கிட்டத்தட்ட நூறு அடிகள் இறங்கி வரும்போது, கீழே ஒரு சிறு குறுகிய பாதையில் நிலவு வெளிச்சத்தைக் கண்டாள். அதைக் கண்டவுடன் அச்சிறு பாதைக்கும் வெளிப்பக்கத்திற்கும் போக்குவரவு இருக்கவேண்டு மென்பதை யறிந்ததுடன்கூட, காற்றும் அவ்வெளியிலிருந்தே வந்திருக்கவேண்டு மென்பதையு மறிந்தாள்.

அம்மச்சுப் படியின் அடிவாரத்துக்கு வந்தவுடன், நேரெதிராக மலையில் குடையப்பட்ட குகைபோலுள்ள ஒரு அறை இருப்பதைக் கண்டாள். அக்குகைக்கு வாசற்படிபோலும் அதற்குக் கதவாகவுமிருந்த ஒரு பலத்த இரும்புக்கிராதி அதைக் குறுக்கிட்டிருந்தது. முதலில் பார்த்தபோது அது காட்டு மிருகங்களை யடைக்கும் கூடோவென்று தோன்றிற்று. ஆனால் விளக்கு வெளிச்சத்தின் சகாயத்தைக்கொண்டு பார்க்கும்போது, கீழே படுத்திருந்த ஒரு மனிதனுடைய உருவம் காணப்பட்டது. எவனுடைய அழுகைக் குறல்கள் அவள் காதுகளை எட்டினவோ எவனுடைய விலங்குச் சங்கிலிகளின் ஓசைகள் கேட்கப்பட்டனவோ, அவன்தான் அங்கு அடைபட்டுக் கிடந்தானென்று நினைத்தாள். அக்கைதி தப்பியோட வழியில்லாமல் இரும்புக் கிராதியால் தடுக்கப்பட்டது மல்லாமல், கைவிலங்குகளாலும் கால் விலங்குகளாலும் சுமத்தப்பட்டிருந்தான். இப்படி அவனை நடத்தினது பத்திரமான இடத்தில் அவனைப் பிடித்துவைக்க வேண்டுமென்ற எண்ணத்தைக் காட்டினதோடுங் கூட அவனை நிஷ்டூரங்களுக் குட்படுத்த வேண்டுமென்று அவனைச் சிறைச்சாலையில் வைத்தவர்களின் கருத்தையும் விளக்கிற்று.

அக்கைதி முகத்தைத் தரையில் மறைத்துக்கொண்டு ஒரு வைக்கோல் குவியலில் குப்புறப் படுத்திருந்தான். அங்கு மனிதர்கள் வந்திருந்ததையவன் அறிந்தும் தலையைத் தூக்கவில்லை. ஒருக்கால் தன்னைக் காணவந்தவர்கள் தன்னை ஹிம்சிக்கிறவர்கள் என்றெண்ணி தலையைத்தூக்க மனமில்லாமலிருந்திருக்கலாம். அழுகையையும் நிறுத்திவிட்டான். ஒருக்கால் தான் படுகிற கஷ்டங்களை வெளிக்காட்ட வெட்கியோ அல்லது தனது கிலேசத்தை பகைவர்கள் பார்த்து நகைத்து ஆநந்திக்கக் கூடாதென்றோ தெரியவில்லை.

கொண்டுவந்த ஒரு பையிலிருந்து வீரன் ஒரு பெரிய ரொட்டியையெடுத்து கிராதியின் கம்பிகளுக் கிடையேவிட்டு உள்ளேதள்ளி இதோ இரவுக்காகார மிருக்கிறதென்றான். அதேசமயத்தில் அக்குகையி லிருந்து ஒரு கல் ஜாடியை யெடுத்தான்; பிறகு எவ்வாயிலின் வழியாக நிலவுவந்ததோ

அதற்குச் சமீபமாகச்சென்று விளக்கணையாதபடி அதை ஒரு குழிந்த மாடத்தில் வைத்து, அம்மாடத்திலிருந்து பெரிதாயும் கெட்டியாயுமுள்ள ஒரு கயிற்றுச்சுருளை யெடுத்தான். அக்கயிற்றுச் சுருளின் ஒரு நுனி தலைக்குயரமுள்ள பாறையில் பதிக்கப்பட்டிருந்த ஒரு இரும்பு வளையத்தில் கட்டப்பட்டிருந்தது. மற்றொரு நுனியை ஜாடியின் கழுத்தில் சுருக்கிட்டு அங்கு ஒரு வட்டமாயிருந்த துவாரத்தின் வழியாய்ஜாடியை உள்ளே விட்டான்.

"ஆ, இங்கே ஒரு கிணறு இருக்கிறதா என்ன?" என்று ஸ்திரீகேட்க, அவன் "நாம் இப்போது நூறு அடிகள் கீழே இறங்கிவந்திருக்கிறோம். இந்த மலையடிவாரத்தில் ஒரு நீரூற்று இருக்கிறது. அந்த ஊற்றுக்கு சுமார் நூற்றைம்பதடி உயரத்தில் நாம் இப்போது நிற்கிறோம். கைதிக்கு வேண்டிய ஜலத்தை இதிலிருந்து இழுக்கப்போகிறேன். இம்மலைக்கோட்டை எதிரிகளால் முற்றுகை போடப்பட்டால், இங்கிருக்கிறவர்களுக்குத் தண்ணீர் கஷ்டம் இருக்காது. இதைத்தவிர இதற்குக்கீழே மற்றச் சுரங்கப் பாதைகளுமுண்டு. இச்சுரங்கங்க ளெதற்கென்றால் முற்றுகை போடுகிறவர்கள் வெற்றியடைந்து கோட்டையிற் புகுந்துவிட்டால் இங்குள்ளவர்கள் தப்பி யோடுவதற்கே" என்று சொல்லவே, அவள் "அதிருக்கட்டும்; நூற்றைம்பதடி ஆழமுள்ள கைபிடிச் சுவரில்லாத இந்த துவாரத்தினோரத்தில் நிற்பது உன் தலையைச் சுழற்றவில்லையா? உனக்குக் கிறுகிறுப்பை யுண்டுபண்ணவில்லையா?" என்று கேட்டாள். ஆனால் வீரன் பதில் சொல்லுமுன் வைக்கோலில் படுத்திருந்த கைதி திடுக்கிட் டெழுந்தவன்போல், "நான் கேட்டகுரல் யாருடையது? நான் கேட்டதா யிருக்கிறதே" என்று ஓலமிட்டான். அவளும், "ஐயோ ஈசா இக்குரலும் நான் கேட்டதா யிருக்கிறதே" என்று கத்தி, உடனே மாடத்தில் வைத்திருந்த விளக்கை வெடுக்கென் றெடுத்துக்கொண்டு இரும்புக் கம்பிகளண்டை ஓடினாள். அவ்வெளிச்சம் கைதியின் முகத்தை நன்றா யெடுத்துக் காட்டவே, அவள் உடனே "அவன்தான். அவன்தான்" என்று உரக்கக் கத்தினாள்.

ஆனால் அத்தருணத்தில் காற்று திடீரென்று வேகமாய் வீச விளக்கணைந்துவிட்டது. துவாரத்தினருகிலுள்ள நிலவு வெளிச்சத்தைத் தவிர மற்றெல்லாப்பக்கமும் இருட்டிலமிழ்ந்திவிட்டது.

௨8-வது அத்தியாயம்.

வீரன் மனதில் இப்பொழுது தான் அந்த ஸ்திரீ மோசக்கருத்துடன் அங்கு வந்தாளெனப்பட்டது. ஒரு நிமிஷத்தில் முன்நடந்த சங்கதிகளைத்தும் ஒன்றன் பின்னொன்றாய் ஞாபகத்திற்கு வந்தன. அவள் அக்கோட்டைக்கு வந்த மறுநாட் காலமேயே சடையனையும் தன்னையும் ஸர்வஜித்துக்கு நேர்ந்த ஆபத்துகளைக் குறித்து எவ்வளவு ஆவலாயும் நுட்பமாயும் விசாரித்தாளென்பது ஞாபகத்திற்கு வரவே, இவள் இபபோது ஸர்வஜித்தினது நன்மையைக்கருதியே தன்னுடன் கீழேவந்தாளென்றுறுதி கொண்டான். இவ்வெண்ணம் அவன் மனதில் உதிக்கவே, அந்த ஸ்திரீயினிடத்தில் கொண்ட பயத்தையெல்லாம் மறந்து, கையிலிருந்து ஜாடியை நழுவ விட்டுவிட்டு, கயிறு தொங்கினபடியேயிருக்க, அவ்விடத்தை விட்டுத்தாவியோடி

உக்கிராவேசத்துடன் அவள் கையை வெடுக்கென்று பிடித்து பல்லை நெர நெர வென்று கடித்துக்கொண்டு, "ஜாக்கிரதை உன்மோசக்கருத்து இங்கு ஒன்றுஞ்செல்லாது" என்றான். "மோசமா? ஏ அற்பஜாதிப்பயலே என்னைப்பார்த்து என்ன பேச்சுப்பேசினாய்? என்று அவள் இருகண்களை யும் அவன் பயப்படும்படி உருட்டி விழித்துக்கேட்க, அவன் "நீ பாதாள லோகத்திலிருந்து வந்த பிசாசாயிருப்பினும் நான் பயப்படேன். யோக்கிய தை கெட்டவளே, நீ எதற்காக இங்கு வந்தாய் சொல்" என, அவளும் இவ னையதட்டுவது பயன்படாதென்று கண்டு, "வீரா, பதராதே, மனதை சமா தானஞ்செய்துகொள். நான் சொல்லுவதை வாங்கிக்கொண்டு பேசு" என் றாள்.

"இனி உனக்கும் எனக்கும் சொல்லவேண்டியதென்னவிருக்கிறது? நான் என் முட்டாள் தனத்தை என்னென்று சொல்லுவது? இப்பல்லவோ நீ வந்ததின் நோக்கம் விளங்குகிறது. நீ அந்தக் கைதியைத்தப்பித்தோட உதவி செய்யவல்லவோ வந்திருக்கிறாய். ஆனால்—" என்று வீரன் மேலே சொல்லப்போகுமுன், அவள் "உஸ் உஸ் இரைந்து பேசாதே. உனக்கு முக் கியமான சில சங்கதிகளைச் சொல்லப்போகிறேன். உன்னை மஹா உன்னத பதவியில் கொண்டுவந்து வைக்க எனக்கு சக்தியுண்டு. அதைத்தனித்து உன் காதோடே சொல்லவேண்டும், இப்படிவா. இப்படிவா என்று சொல்லிக் கொண்டே அவனை அக்குகையிலிருந்து தூரக் கூட்டிக்கொண்டுபோனாள். வீரா நான் சொல்லுவதற்கு மாத்திரம் நீ இணங்கினால், நீ கனவில் கூட நினையாத அவ்வளவு பெரிய அந்தஸ்தையடைவாய். உன் தலையில் கனகா பிஷேகஞ்செய்ய எனக்குத் திறமையுண்டு. நீ ஏன் எப்பொழுதும் ஊழியஞ் செய்துகொண்டே இருக்கவேண்டும்? நீ ஏன் உன் எஜமானர்களுக்கும் மே லாக ஒரு தலைவனாக ஆகக்கூடாது? நான் சொல்லுவதைக்கேள் நீ அவர்களி லும் மேன்மையையுடையவனாவாய். நீ ஒரு கட்டழகியை விவாகஞ்செய்து கொள்ளுவாய். உனக்கவள் அளவற்ற ஸ்திரீ தனங்கொண்டுவருவாள். இவ்வ ளவு பாக்கியங்களும் உனக்குக்கிடைக்க இருக்க நீ ஏன் முட்டாள்தனமாய் என்னுடன் பகைத்துக்கொள்ளுகிறாய்? என்று சொல்லவே, உடனே அவ னும் அவளுடைய சக்தியில் நம்பிக்கைகொண்டு மயங்கி, அப்படியா இவைக ளெல்லாம் எப்படிக்கிடைக்கும்? எப்போது கிடைக்கும்? என்று ஆவலு டன் வினவ, அவள் உன்னுடைய நல்லகாலம் இன்று இருபத்தொன்றும் நாள் முதற்கொண்டு துவங்கும். பட்டாளம் பட்டாளமாயுள்ள வேலையாட்களால் சூழப்பட்டு ஒரு நேர்த்தியான கோட்டையில் வசிப்பாய். வேட்டையாடு வதிலோ சண்டையிலோ உனக்கு நிகர் ஒருவரும் இருக்கமாட்டார்கள். உன் னைக்கண்டு பலர் வியங்குவார்கள். பலர் அசூயை கொள்வார்கள். உன்னெதிரி கள் உன் பெயரைக்கேட்ட மாத்திரத்தில் நடுங்குவார்கள். திவ்ய அழகுள்ள உன் மனைவி கந்தர்வர்களைப்போலுள்ள குழந்தைகளைப்பெறுவாள்" என, அவள் மஹா அந்தரங்கமாய்ச்சொன்ன ஆசை வார்த்தைகளால் குதூகலித்து பரவசங்கொண்டு, ஐயோ, நீ சொல்லுவதில பாதி உண்மையாய் நடந்தால் போதுமே என்றான. உடனே அவள் "என்னுடைய வார்த்தைகளில் நீ சிறி தும் சந்தேகங்கொள்ளக்கூடாது. என் கண்களின் காந்தியைப்பார்த்திருந் தும், எனது சக்தியை நீ அறிந்திருந்தும் நீ எப்படி சந்தேகிக்கலாம்" என்று சொல்ல, அவன் இல்லை, இல்லை, உன்னிடத்தில் முழு நம்பிக்கை கொண் டிருக்கிறேன். உனக்குநான் செய்யவேண்டியதென்ன? இதோசெய்கிறேன்"

என்ருன். நீ செய்யவேண்டியது அதிகமல்ல. நான் உனக்களிக்கப்போகிற வரங்களுக்கு நீ எனக்குச் செய்யப்போகிறதொன்றுமில்லை. ஆனல் இப்பால் வா, இப்பால்வா நாம் பேசுவதை கைதி கேட்கக்கூடாது என்று சொல்லிக் கொண்டே வீரனைக் கூட்டிக்கொண்டு தூரச்சென்ருள். இப்பொழுது இருவர்களும் அத்துவாரத்திற்கு இரண்டு கஜங்களுக்கப்பால் நின்ருர்கள்.

“வீரா, நான் உனது க்ஷேமத்தைக் கோருகிறவள் என்பதைக்கண்டு கொண்டாயா? நீ எனக்குச்செய்கிற உபகாரத்திற்கு பதினயிரம் பங்குகளுக்குமேல் பிரயோசனத்தையடைவாய் என்பதையுமறிந்தாயா? என்ருஸ்திரீ கேட்க, அவன் அடங்கா மகிழ்ச்சியுடன், “அம்மா எனது முழு நன்றியும் உனக்கர்ப்பணமே. மலையதிபதிகள் நான் உன் வரங்களைப்பெற்றுக்கொண்டதற்கு என்னைக்குற்றஞ் சொல்லமுடியாது. தவிரவும் நானும் பலத்த தலைவனுய்விட்டால் அவர்களுடைய ஊழியனயிருப்பதற்குப்பதிலாக அவர்களுடைய நண்பனுய் இருப்பேன், என்று சொல்ல, அவள், ஆம், அவர்களைவிட தனவந்தனுயும், மேன்மையுள்ளவனுயு மிருப்பாய். ஏனெனில் நீ ஒரு அழகிய சீமாட்டியைக் கல்லியாணஞ்செய்து கொள்ளுவாய். அழகிய சந்ததியை யடைவாய். அவர்களோ பெண்சாதியற்று பிள்ளையற்று இருக்கிருர்கள்.

ஆ, அம்மா, எப்படிப்பட்ட ஸ்வர்க்கத்தை என் கண்களுக்குத்தெரியும்படிசெய்தாய் என்னிடமிருந்து நீ எதிர்பார்க்கிற உபகாரம் என்னவென்றுசீக்கிரம் சொல் என்றுகேட்டான். உன் இடுப்பில் தொங்குகிற கொத்துச்சாவிகளை என் கையில் கொடுத்துவிடவேண்டியது தான் என்று சொன்னுள். கொத்துச்சாவிகளா? என்று திடுக்கிட்டுக்கேட்டான். அவனுடைய முகம் இறங்கிவிட்டது. முந்தியுணர்ந்த உத்ஸாகம் மங்கி, சம்சயத்தைக்காட்டுகிற மாதிரி கொத்துச்சாவி எதற்கு? அதோ அந்த குகையுள்ளைத்திறக்கவா? என்றுகேட்க, அவள் உடனே, இல்லை இல்லை, பாறையில் குடையப்பட்டிருக்கிற இந்தவிடத்தில் ஒரு வட்டமான கோட்டைக்கிழித்து அதன் நடுவே சாவிகளை வைத்து நான் மந்திரங்களை ஜபித்தால் அச்சாவிகளுக்கு சொல்லிமுடியாத சக்திகள் ஏற்படும். அச்சாவிகள் உனக்கு நன்மைகளைத்தரும் எனவே, அவன் சந்தேகம் நீங்கினவனுய், அவ்வளவுதானு? அப்படியானல் சாவிகளை தாராளமாய் வாங்கிக்கொள் என்று கையில் கொடுத்தான். அதே சமயத்தில் ஒரே மூர்க்கமாய் அவன் மேல் அவள் பாய்ந்து தனது முழு பலத்தையும் பிரயோகித்து அவனை அந்த துவாரத்திற்குள் தள்ளிவிட்டாள். அவனும் ஹோவென்றலறிக்கொண்டு தொங்கிக்கொண்டிருக்கும் கயிற்றைப் பிடித்துக்கொள்ள கடும்பிரயத்தினஞ் செய்கிறவன்போல் கையை விரித்துக் கொண்டு தலைகீழாய் துவாரத்தில் விழுந்தான். அடுத்தக்ஷணமே கண்ணுக்கு மறைந்துவிட்டான். அவளும் உடனே ஓரத்திற்சென்று கயிற்றைப் பிடித்து கொண்டு கீழே பார்த்தாள். பிடித்திருந்த கயிறு, வீரன் விழும்போது உண்மையில் கயிற்றைப் பிடித்துக்கொண்டானே வென்று சந்தேகத்தையுண்டு பண்ணும்படி, கெட்டியாய் இழுக்கப்பட்டிருந்தது. ஆனல் அடுத்த நிமிஷம் அக்கயிறு அவள் பிடிப்பில் தளர்ந்து நின்றது. கீழே குனிந்து பார்க்க, மையிருட்டில் ஒன்றுந்தெரியவில்லை.

அவள் அந்த துவாரத்தை விட்டகலுகையில், அவள் தேகமுழுதும் நடுக்கமெடுத்தது. ஒரு நிமிஷத்திற்குள் சொல்லிமுடியாத தலை கிறுகிறுப்

“புண்டாயிற்று. என்ன நடந்துவிட்டது? என்ன நடந்துவிட்டது?” என்று கைதியினிடத்திலிருந்துவந்த வார்த்தைகளுக்குக்கூட பதில் கூற முடியாத படிக்கும் தான் கீழே விழாமல் சுவற்றில் சாய்ந்து கொள்ளும்படியான அவ்வளவு மயக்கத்தையடைந்தாள்.

நான் செய்த காரியம் கொடியது, கொடியது என்றும், ஆனால் என்ன செய்வது? அப்படி செய்வது அவசியமாயிருந்தது சுவாமிக்குத்தெரியும். அப்படிசெய்தல் அவசியமென்றும் பகவானே, எனதுமற்றக்கொடிய பாபங்களோடுங்கூட இதையும மன்னியும் என்று தனக்குள்ளேயே முணுமுணுத்துக்கொண்டாள்.

பிறகு திடீரென்று தனது முழுபலத்தையும் அடைந்தவளாய் கிராதியண்டை விரைந்து சென்று கதவைத்திறக்க சாவிகளை யெடுத்தாள்.

கைதியானவன் அவளை நடந்த சமாசாரங்களைச் சொல்லவேண்டுமென்று அதிக ஆவலுடன் கேட்க, அவளும் நடந்ததைச்சொல்லிவிட்டுக் கதவைத்திறந்து உள்ளேசென்று விலங்கைமாட்டியிருந்த பூட்டைநீக்கி அவனை விடுவித்துத் தப்பியோடும்படி சொன்னாள். அதற்கவன் எப்படித்தப்பியோடுவதுஎன்றுகேட்க அவள், “எனக்குத் தெரிந்தவழி ஒன்றுதான். அந்த துவாரத்தின் வழியாய் கயிற்றைப் பிடித்துக்கொண்டு கீழே இறங்கி ஓடிவிடுவது தான்” என்றாள். “ஐயோ, என்னால் முடியாது. அதன் வழியாய்ச் சென்றால் நிச்சயம் சாகவேண்டியது தான்” என்றான். “நான் உன்னை பயங்காளி என்று கூப்பிடும்படி வைத்துக்கொள்ளுகிறாயா என்ன” என்று கடிந்துபேசிவிட்டு, “உனக்கு அந்த துவாரத்தின் வழியாய் இறங்கித் தப்ப இஷ்டமா, அல்லது இங்கேயே மடிய இஷ்டமா, சொல்” என்று சிறிதும் தயையின்றிக் கேட்க, அவன் “நீ எப்படி யம்மா தப்பிப்பாய்” என்று கேட்டான். அதற்கவள், “நீ பயங்காளி, நான் பயங்காளியல்ல. நான் அத்துவாரத்தின் வழியாகத்தான் இறங்கப்போகிறேன்” என்றாள். “நாம் என் மச்சுப்படிகளேறி தப்பியோடக்கூடாது?” என்று மறுபடி கேட்டவனைப்பார்த்து, “யோசனையில்லாதவனே, கோட்டை வாசலிலிருக்கிற காவலாளிகளை யெல்லாம் தாண்டி எப்படிப்போவது? இப்பொழுது தப்பித்தோடும் வழி இது ஒன்று தான்” என்று துவாரத்தைச் சுட்டிக்காட்டிக்கொண்டு சொன்னாள். “சரி உன்னிஷ்டப்படியே இருக்கட்டும்” என்று சொல்லி தன்னைக் கூடியமட்டும் தைரியஞ்செய்துகொண்டு கயிற்றைப்பிடித்துக் கொண்டிறங்கினான். அவள் கயிற்றைப் பிடித்துககொண்டிருந்தாள். சிறிது நேரத்திற்கெல்லாம் இழுத்துப்பிடிக்கப்பட்ட கயிறு தளர்ந்தது. கைதி கீழே இறங்கிவிட்டானென்று நிச்சயங்கொண்டு, தானும் கயிற்றைப் பிடித்துக்கொண்டு கீழே இறங்கினாள். அவள் இறங்கிக்கொண்டே வருகையில் ஒரு பாறையில் அவள் கால்கள் தங்கின. அதே சமயத்தில் ஒரு கையொன்று அவளுடைய வலது கையை முரட்டுத்தனமாயும் கெட்டியாயும் பிடித்துக்கொண்டது.

“அகப்பட்டுக்கொண்டாயா இப்பொழுது” என்ற வீரனுடைய குரல் இடிமுழக்கம்போல் காதில் விழுந்தது. அடுத்த நிமிஷம் அவள் கரகரவென்று இழுக்கப்பட்டு, ஓரிடத்தில்பலமாய் கீழேதள்ளப்பட்டாள். நொடிப்பொழுதில் அவளது கைகளிரண்டும் சரீரத்தோடு கயிற்றால் இருகக்கட்

டப்பட்டன. சற்று தூரத்தில் கைதியின் "ஐயோ" வென்ற புலம்பலைக் கேட்கவே, அவனும் அகப்பட்டுக்கொண்டானென்பதை யறிந்தாள். வீரன் "ஏ கொலைகாரி" என்று சொல்லிக்கொண்டே அவளை இன்னுஞ் சிறிதுதூரம் இழுத்துக்கொண்டுபோய் அவளுடைய கால்களையும் கட்டிவிட்டான். அவளை சில்லென்ற சுற்றறையில் கைகால்களை யசைக்க முடியாமல் போட்டுவிட்டுப் போய்விட்டான். போனவன் மச்சுப்படி யேறுவதாகத்தெரிந்தது. வீரனுடைய காலடி சத்தம் ஓய்ந்தவுடன், ஸ்திரீ இருட்டில் "ஓ கைதியே எங்கிருக்கிறாய்" என்றாள். "சமீபத்தில் தானிருக்கிறேன். பாபி உன்னால் இவ்வளவும் வந்த"தென்றான். அவள் "ஏ நன்றி கெட்டவனே, உனக்கு ஐயோ வென்றால் ஆறுமாமாங்கம் பாபமுண்டு" என்றாள். "நீ செய்த உபகாரம் என் துன்பங்களை யதிகப்படுத்தினவே யொழிய நிவர்த்திக்கவில்லையே" என்று சொல்லி மறுபடியும் புலம்ப ஆரம்பித்தான். இதற்குப் பிறகு ஒருமணிநேரஞ்சென்றது. மறுபடியும் வீரன் ஒரு விளக்கை யெடுத்துக்கொண்டுவந்தான். வந்தவன் ஸ்திரீயைப்பார்த்து கோபமும் நகைப்பும் கலந்து சொல்லுகிறான். "ஏ கொடியவளே, நீ உத்தேசித்த கொலை நிறைவேறிவிட்டதென்று நினைத்தாய்; நல்லவேளையாய் விழும்போது கயிற்றைப்பிடித்து கொண்டேன். நான் நாசமடைந்திருந்தாலும், நான் உன் வார்த்தைகளை முட்டாள்தனமாய் நம்பினதற்கும் எனது நிகரற்ற எஜமானர்களுக்குதுரோகம் நினைத்ததற்கும் சரியான முடிவாய்த் தானிருந்திருக்கும். ஆனால் அவர்கள் வந்ததும் நடந்ததை யெல்லாம் ஒளிக்காமல் சொல்லிவிடுவேன். நாளைக்காலமே நீங்களிருவரும் தூக்குமரத்தில் ஆடிக்கொண்டிராவிட்டால் அது என் குற்றமல்ல என்று சொல்லிக்கொண்டே அங்கிருந்த இரண்டு கிடங்குகளின் கதவைத்திறந்தான். ஆண் கைதியை ஒன்றில் தள்ளிவிட்டு, பெண் கைதியை வயற்றெரிச்சலைக் காட்டும்படி மற்றொன்றில் பலமாய்த் தள்ளினான். அக்கிடங்குகளைப் பூட்டிவிட்டு மறுபடியும் பரிகாசஞ் செய்துகொண்டு சொல்லுகிறான், "நீ மஹா தந்திரமாய்த் தான் எல்லாவற்றையும் ஏற்பாடு செய்தாய். உன்னுடைய காரியமும் கைகூடியிருக்கும். மயிரிழை தப்பிவிட்டது. ஜயமடைந்து விட்டோமென்று ஆநந்தித்துக்கொண்டிருக்குந் தருணத்தில் என் கையில் மறுபடியும் அகப்பட்டுக்கொண்டாய். உன்னுடைய ஏற்பாடுகளெல்லாம் பாழாய்ப்போயின. இப்போது அதிகாரம் என் கையிலிருந்தால், ஒரு கயிறு தான், ஒரு தூக்குமரந்தான், ஒரு சுருக்குத்தான் போதும்—உன்னை யமலோகத்திற் கனுப்பிவிடுவேன். ஐயோ உன்னை நம்பினதின் புத்தியீனத்தை நினைத்தால் என் தலையை இப்பாறையில் மோதிக்கொண்டு, ஜீவனை இழந்துவிடலாமெனத் தோன்றுகிறது".

இப்படிப் பேசிவிட்டு அவன் அவ்விடம் விட்டுபோய் மச்சுப்படியேறினான். அவனுடன் விளக்கும் மறைந்துவிட்டது. அவர்கள் இருட்டில் கிடங்குகளில் அடைபட்டுக் கிடந்தார்கள்.

ஈ. கே. சிவசுப்பிரமணிய ஐயர், பி. ஏ.

ஆர்கிமிடீஸ் கண்டுபிடித்த உண்மை.

முன் 16-வது பாடத்தில் நிறுத்தின விஷயத்தை இப்பொழுது தொடர்வோம்.

ஒரு கல் ஜலத்தில் இருக்கும்பொழுது, அதன் பளுவு குறைந்து இருப்பதுபோல் தோன்றுகிறதல்லவா ? எவ்வளவு பளுவு குறைகின்றதென்பதை இப்பாடத்தில் சொல்லுகிறேன். ஒரே பளுவுள்ள ஒரு தாமிரக்கட்டியும் அதே பளுவுள்ள ஒரு ஈயக்கட்டியும் உம்மிடம் இருப்பதாக வைத்துக் கொள்வோம். இரண்டும் ஒரே அளவாய் இருக்குமா ? அல்லது ஒன்று மற்றொன்றைவிடப் பருமனாய் இருக்குமா ? தாமிரக்கட்டி ஈயக்கட்டியைவிடப் பருமனாய் இருக்கும் என்பீர் ! இஃது என் ? ஈயக்கட்டியில் பொருள் நெருக்கம் ஜலத்தைவிட $11\frac{1}{2}$-பங்கு; தாமிரத்திலோ 9 பங்கு தான். ஆகையால் ஒரே பளுவுளள தாமிரக்கட்டியும், ஈயக்கட்டியும் வேண்டுமானால், தாமிரக் கட்டி ஈயக்கட்டியைவிடப் பருமனாய்த் தானே இருக்கவேண்டும்.

இரண்டு கட்டிகளும் ஒரே பளுவு உள்ளவைகள்; ஆனால் தாமிரக்கட்டி சற்று பருமனாய் இருக்கிறது. இப்பொழுது இரண்டையும் ஜலத்தில்போட்டு எடை இவ்வளவு இருக்கிறதென்று பார்ப்போமானால் தாமிரக்கட்டி எடையில் குறைந்திருப்பதாகத் தோன்றும்; ஈயம் அவ்வளவு குறைவாய்த்தோன்றாது; சாதாரணமாய் நிறுக்கும்பொழுது இரண்டும் ஒரே பளுவுள்ளவைகள் தானே ? ஜலத்தில் மட்டும் ஈயம் கொஞ்சம் குறைவாய்க் காணவும் தாமிரம் அதைவிட அதிகமாகக் குறைந்திருப்பதாகக் காணவும், நியாயம் என்ன ? அதைத்தான் இப்பொழுது விவரிக்கப்போகிறேன். தாமிரக்கட்டி ஈயக்கட்டியைவிட அதிக இடத்தை அடைத்துக்கொள்ளுமல்லவா ? எப்பொழுது அதிக இடத்தை அடைத்துக்கொள்ளுகின்றதோ அப்பொழுது அதன் பருமன் எம்மட்டோ அவ்வளவு ஜலம் தாமிரத்துக்கு இடங்கொடுக்கின்றது. ஆனால் ஈயமோ ஒரே பளுவுள்ளதானாலும் பொருள் நெருக்கம் மிகுந்துள்ள வஸ்து ஆனது பற்றி, பருமன் தாமிரத்தினும் குறைவாய் இருக்கின்றது. ஆகையால் அதன் அளவு எவ்வளவோ அவ்வளவு ஜலம் மட்டு தானே இடம் கொடுக்கவேண்டியிருக்கிறது; ஆகையால் ஜலத்தில் தாமிரம் அதிக இடத்தை அடைத்துக்கொள்ளும; ஈயக்கட்டியோ அதைவிடச் சற்று குறைவான இடத்தை அடைத்துக்கொள்ளும். ஆகையால் ஜலம் இவற்றைத் தாங்கும் சக்தியும், இரண்டிற்கும் வேறுபடுகிறது. தாமிரம் அதிக இடத்தை அடைத்துக்கொள்வதால், ஜலம் அதை அதிக பலத்துடன் மேலே தாங்கிக் கொள்ளுகின்றது; ஈயம் அவ்வளவு இடத்தை அடைத்துக்கொள்வது இல்லையாகையால், சற்று குறைவான பலத்துடன் மேலே தாங்குகின்றது. இதுவே போல் இவ்விரண்டு கட்டிகளின் பளுவு எவ்வளவோ அவ்வளவு பளுவு உள்ள அலுமினியம் எடுத்துக்கொண்டால், அதன் பருமன் எவ்வளவு இருக்கும் ? அலுமினியத்தில் பொருள் நெருக்கம் (Density) ஜலத்தை விட 2பங்கு தான் இருப்பதால் ஈயத்தின் பருமனைவிட சுமார் 5 பங்கு பருமனாய் இருக்கும். இதையும் ஜலத்தில் போட்டு நிறுத்தால் அலுமினியம், (தாமிரம்,

ஈயம்) இவற்றை விடப்பருமன் ஆனதுபற்றி அதிக ஜலத்தின் இடத்தைத் தான் அடைத்துக்கொள்ளும். ஆனபடியால் ஜலம் அதிக பலத்துடன் அலுமினியத்தைமேல் நோக்கித் தாங்கிக்கொள்ளும்.

'அதிகம், குறைவு' என்கிறீரே; எவ்வளவு குறைவு; எவ்வளவு அதிகம் என்று சரியாய்க்கண்டு பிடிக்கவேண்டாமா? என்றால் சொல்லுகிறேன். ஒரு வஸ்துவை ஜலத்தில் அமிழ்த்தினால் அது தன் பருமனுக்குச்சரியான இடத்தை அடைத்துக்கொள்ளுகிறது; அந்த ஜலத்தின் கனம் எம்மட்டோ, அத்துணைகனம் வஸ்துவிலிருந்து குறைந்துபோனது போல் தோன்றும்; உதாரணமாக, ஒருகன அங்குலமுள்ள ஈயத்துண்டு ஒன்று உம்மிடம் இருக்கிறது; அதன் கனம் சுமார் $6\frac{1}{2}$ அவுன்ஸ், ஜலத்தில் போட்டால் அக்கட்டிக்கு ஒருகன அங்குலம் இடம் வேண்டியிருக்குமல்லவா? ஒருகன அங்குலம் ஜலத்தின் நிறை $\frac{1}{2}$ அவுன்சு ஆனால், ஜலத்தில் நிறுக்கும்போது ஈயத்துண்டு $(6\frac{1}{2}—\frac{1}{2})=6$ அவுன்சு தான் நிறையுள்ளதுபோல் தோன்றும். இதுபோல்தான் மற்ற வஸ்துக்களுக்கும். அதிக பருமனாய் இருந்து அதிக இடத்தை அடைத்துக்கொள்ளும் வஸ்து தண்ணீரில் நிறுக்கும்பொழுது அதிக கனக்குறைவாய் இருப்பதுபோல் தோன்றும். ஆகையால் ஜலத்தில் அமிழ்த்தும் ஒவ்வொரு வஸ்துவும் அவ்வஸ்துவின் பருமனுக்குச் சரியான அளவுள்ள ஜலத்தின் எடைகுறைந்துபோய் இருப்பதாகத் தோன்றும். ஜலபதார்த்தம் ஒவ்வொன்றும் அழுத்தும் சக்தியுடையன என்று முன்னமேயே சொல்லி இருக்கிறோம் அல்லவா? ஆகையால் இவ்வுண்மை ஒவ்வொரு ஜலபதார்த்தத்துக்கும் சரியே.

அதாவது, ஒரு வஸ்துவை, ஒரு ஜலபதார்த்தத்தில் அமிழ்த்தினால் அதன் எடை குறைவாகத்தோன்றும். அவ்வஸ்துவின் பருமனுக்குச்சரியான அளவுள்ள ஜலபதார்த்தத்தின் கனம் எவ்வளவோ அவ்வளவு கனம் அவ்வஸ்துவுக்குக் குறையும்.

இவ்வுண்மையை சுமார் 2200 வருஷத்திற்கு முன் ஆர்கிமீடீஸ் என்னும் கிரீக்கு தேசத்து சாஸ்திரபண்டிதர் கண்டுபிடித்தார். இதைக் கண்டுபிடிக்கும்படி நேர்ந்ததற்கு ஒரு கதை சொல்வதுண்டு.

ஸிராகூஸ் என்னும் தேசத்து அரசனான "ஹீரோ" என்பவன். ஒரு தட்டானிடம் சுத்தமான பொன் கொஞ்சம் கொடுத்து, அதைக்கொண்டு ஒரு கிரீடம் பண்ணும்படி உத்திரவு செய்தான். கொடுப்பதற்குமுன் தங்கத்தை நிறுத்துப்பார்ப்பது யாருக்கும் ஸகஜம் தானே!! கிரீடம் பண்ணி முடிந்தது; தட்டானும் கொண்டு வந்து கொடுத்தான். அரசன் முன் எவ்வளவு கனம் பொன் கொடுத்தானோ அவ்வளவு எடை, கிரீடமும் இருந்தது. ஆகையால் தட்டான் போய்விட்டான். கிரீடத்தைப் பார்த்ததும் அரசனுக்கு, அக்கிரீடம் சுத்தமான தங்கத்தால் செய்யப்படவில்லைபோல் தோன்றிற்று. ஆகையால் அரசன் அக்கிரீடத்தை சாஸ்திர பண்டிதனான ஆர்க்கிமீடீஸினிடம் அனுப்பி 'அக்கிரீடம் சுத்தமான தங்கமா? அல்லது தட்டான் தங்கத்தைத் திருடிக்கொண்டு அதே கனமுள்ள வேறு உலோகங்களைக் கலந்துவிட்டானா'? என்று பார்க்கும்படி உத்திரவு செய்தான்.

கதை :

பண்டிதரும், எப்படி கண்டறிய முடியுமென்று ஆலோசித்துப்பார்த்தார். ஒன்றும் கூடவில்லை. பலநாள் கழிந்தன. ஒருநாள் ஸ்நானத்திற்குத் தொட்டியில் ஜலம் நிரப்பியிருந்தது; பண்டிதர் ஸ்நானத்திற்கு இறங்கினர்; அப்பொழுதும் அரசனது உத்திரவைப்பற்றியே தானே எண்ணிக்கொண்டிருக்கிறார்!! இறங்கவே ஜலம் தன் உடலைத்தாங்குவதை அறிந்தார்; உடலின் பருமன் எவ்வளவோ அவ்வளவு ஜலத்தின் இடத்தை உடல் அடைத்துக்கொள்ளுமல்லவா? உடனே அரசன் கேள்விக்குப்பதில் ஆர்க்கிமீடிஸின் மனதில் உதித்தது. உதித்ததுதான் தாமதம்; குதித்தார் தொட்டியிலிருந்து; ஓடினர் தெருவழியாய்; நான் கண்டேன்! கண்டேன்!! தெரிந்தது!!! தெரிந்தது!!!! என்று ஓலமிட்டுக்கொண்டு ஓரே ஓட்டமாய் அரசன் மாளிகைக்கு ஓடினர்.

என்னதெரிந்துகொண்டார்? இதுதான். தங்கம் ஜலத்தைவிட 19 பங்கு கனமானது; அதாவது பொருள் நெருக்கமுடையது. ஆகையால் கொஞ்சம் எடை தங்கத்தைத் திருடிக்கொண்டு, (10 ரூபாய் எடைத்தங்கம் என்று வைத்துக்கொள்வோம்.) அதே எடைத்தாமிரத்தைப்போட்டு விட்டானுல், நிறுத்துப்பார்த்தால் சரியாய்த்தானே இருக்கும்; ஆனல் தாமிரம் ஜலத்தைவிட 9 பங்கு கனமுள்ளது. ஆகையால் சுத்தத்தங்கம் எவ்வளவு பருமன் இருந்ததோ அதைவிட இரண்டுமுறை பருமனுக அல்லவோ இருக்கும் தாமிரம். தட்டான் திருடி இருப்பின், அரசன் கொடுத்த தங்கத்தின் பருமனைவிட கிரீடத்தின் பருமன் அதிகமாகவல்லவா இருக்கும்? இப்பொழுது பண்டிதனும் அரசனும் சேர்ந்து செய்யவேண்டிய பரீக்ஷை ஒன்றுதான். முன் எவ்வளவு தங்கம் தட்டானிடம் கொடுத்தானே அவ்வளவு சுத்தத்தங்கம் எடுத்துக்கொண்டு அதைஜலத்தில் போட்டுப்பார்க்கவேண்டியது. கிரீடம் எவ்வளவு இடத்தை அடைத்துக்கொள்ளுகிறதென்று பார்க்கவேண்டியது. இரண்டும் சரியாய் இருந்தால் தட்டான் திருடவில்லை என்பது நிச்சயம். கிரீடம் அதிக இடம் அடைத்துக்கொண்டால் தங்கத்தைத்திருடி அவ்விடையுள்ள வேறு உலோகத்தை சேர்த்து இருக்கிறன் என்று சொல்லலாம்.

இவ்விதம் பரீக்ஷைசெய்து பார்க்கவே, ஹீரோவின் கிரீடம் அதிக இடம் வேண்டிற்று என்பதைக்கண்டான்; தட்டான் திருட்டு வெளிப்பட்டது: தட்டானைத்தண்டித்தான் என்று சொல்லவேண்டியதில்லையே!!

ஆகையால் ஜலமேயாகட்டும் அல்லது ஜலம்போன்ற வேறு திரவப்பதார்த்தமேயாகட்டும், ஏதாவதொன்றில் ஒரு பொருளை அமிழ்த்தும் சமயத்தில் அப்பொருளின் எடை குறைவதுபோல் தோன்றும். அப்பொருளின பருமன் எம்மட்டோ அம்மட்டு திரவப்பொருளின் எடை தான் குறையும். இவ்வுண்மையைத்தான் ஆர்க்கிமீடீஸ் கண்டுபிடித்த உண்மையென்று சொல்வது.

☞ ஆர். கே. சுவாமி, பி-ஏ., எல்-டி.

சிறுவர்களுக்கான கதைகள்

உண்மை பேசிய ஸ்காட்ச் சிறுவன்.

பதினெட்டாவது நூற்றாண்டின் மத்தியில், பிரிடானியா தேசமாகிய, இங்கிலாந்து ஸ்காட்லந்து இவற்றை ஜேம்ஸ் இரண்டாவன் என்னும் ஓர் அரசன் ஆண்டுவந்தான். அவ்வரசன் ஜனங்களின் இஷ்டத்தைச் சற்றும் கவனியாது, பார்லிமெண்டு சபையை முற்றிலும் அவமதித்து, தன் மனம் போனபடியெல்லாம், தேசத்தை ஆளத்தலைப்பட்டு, குடிகளை வருத்திய படியால், ஜனங்கள் அரசனுக்குமாறாய்க் கலகம்செய்து, அவ்வரசன் செய்த குற்றங்களை விசாரணைசெய்து, அவனைக் குடிகளுக்குத் துரோகம் செய்தவனென்று குற்றஞ்சாட்டி, அவனைத் தள்ளிவிட வேண்டியதென்று உத்திரவு செய்தனர். அந்த ஜேம்ஸ் அரசனுடைய பேரனாகிய "சார்லஸ் எட்வர்ட்" என்பவன், தன் பாட்டனுடைய தேசத்தை மறுபடியும் கைப்பற்ற எண்ணி, ஸ்காட்லந்துக்குவந்து தக்க ஏற்பாடுகள் செய்தான். ஏனென்றால் ஸ்காட்லந்தில் பல ஜனங்கள் அரசன் பேரனான பிரின்ஸ் சார்லஸ் எட்வர்ட்டுக்கு உதவி செய்வதாக வாக்களித்தனர். கூடிய ஸ்காட்சு சேனையை அழைத்துக்கொண்டு, இராஜகுமாரன் இங்கிலாந்து நோக்கிப் படையெடுத்துச் சென்றான். ஒன்றும் பிரயோஜனப்படவில்லை. சில நாள்கழித்து நடந்த சண்டையில் பிரின்ஸ் எட்வர்ட் தோற்றுவிட்டதுமன்றி, அவன் சேனை சின்னாபின்னமாயிற்று.

பிரின்ஸ் உடனே தப்பி ஓடவேண்டி நேரிட்டது. தன்னைப் பின்தொடர்ந்த சிலருடன், ஸ்காட்லந்துக்கு ஓடினான். அத்தேசத்தின் வடபாகத்திலுள்ள ஒரு தீவில்போய் ஒளிந்துகொண்டான். எதிரிகளோ துரத்திக்கொண்டே வருகிறார்கள். ஆனால் ஸ்காட்ச் தேசத்தவருக்கு தங்கள் பிரின்ஸின் மேலுள்ள பக்தி இவ்வளவு அவ்வளவு என்று சொல்லமுடியாது! எவ்வளவு கஷ்டங்கள் அனுபவித்தாலும், தங்கள் பிரின்ஸைச் க்ஷேமமாய்க் காக்கவேண்டுமென்கிற எண்ணத்தை மேற்கொண்டு, பின்தொடரும் எதிரிகளை ஏமாற்றிக்கொண்டே இடத்துக்கு இடம்மாறிக் கடைசியாய் பிரான்சு தேசத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டனர்.

அப்பிரின்ஸ் சார்லஸ் ஸ்காட்லண்டு தேசத்தின் வடபாகத்தில் அலைந்து கொண்டிருந்த காலத்தில் நிகழ்ந்ததொரு செய்தியை இன்று உங்களுக்கு நான் உரைக்கப்போகிறேன்.

எதிரிகள் பிரின்ஸ் சார்லஸின் தலையைக் கொண்டு வருபவனுக்கு 30,000 பவுன் இனாமாகக் கொடுப்பதாகப் பிரசங்கம் செய்தார்கள். ஆகையால் ஒவ்வொருவரும் அதிக சிரமப்பட்டுத்தேட ஆரம்பித்தார்கள். ஒரு கூட்டத்தார் தம் தலைவனுடன், அப்பொழுதுதான் பிரின்ஸ் எட்வர்டு விட்டுப் போயிருந்த ஒரு குகையண்டை வந்தனர். சிறிது நேரத்திற்கு முன் வரையில் அவ்விடத்தில் மனிதசஞ்சாரம் இருந்ததென்பது நன்றாய் விளங்

கிற்று. சார்லெஸ் தான் அங்கே ஒளிந்துகொண்டு இருந்து விட்டு புறப்பட்டுப் போயிருக்கவேண்டு மென்று யோசித்தார்கள். ஆனால் எத்திசை நோக்கிப் போயிருப்பானென்று ஒருவரும் சொல்லமுடியவில்லை. அச்சிறுசேனைத் தலைவனோ கொடும் புலி யென்னபடுபாவி !! தான் எப்படியாவது அரசிளங் குமாரனைக்காட்டிக் கொடுத்து முப்பதினாயிரம் பவுனை சம்பாதித்து விடவேண்டு மென்றஆசை அவனைத் தூண்டிற்று. எக்காரியமானாலும் செய்து பிரின்ஸ் எட்வர்டை கண்டே பிடித்துத்தரவேண்டு மென்ற தாகமுடையவன். ஆகையால் குகையில் ராஜபுத்திரனைக் காணாமல்போகவே அவனுக்கு உண்டான கோபத்திற்கு அளவில்லை. குகையின் வாயிலில் நின்றுகொண்டு எத்திசை போயிருப்பான் சார்லஸ் என்று ஆச்சரியத்துடன் யோசித்த வண்ணமாய் இருந்தான்.

சேனைத்தலைவன் (காப்டன்) இம்மாதிரி சித்திரப் பதுமைபோல் குகை வாயில் அசைவற்று நின்றுகொண் டிருக்கும்போது வீமசேனன் போன்று வலிமை அமைந்த தேகத்தோடுகூடிய ஒரு ஸ்காட்ச் தேசத்தவன் அவ்வழியேவந்தான். அவனைக் கண்டதும் சேனைத்தலைவன் அந்த ஸ்காட்சு மனிதனைப் பிடித்துக் காட்டச்சொல்லி, அவனிடம்சென்று, "பிரின்ஸ் சார்லஸ் எட்வர்ட் எவ்வழிச்சென்றான்; உண்மையுரை! இல்லையேல் உன்தலையை வாங்கிவிடுவேன்" என்றான். நிசமாகவே பிரின்ஸ் சார்லஸ் எவ்வழிப்போனானென்பது அந்தமலை நாட்டானுக்குத் தெரியும் அவன் இவ்வழி வரும்போது, சற்றுமுன்தான் இடதுபுறம் பிரிந்துபோகு மோர்பாதைவழியே பிரின்ஸ் எட்வர்ட் போவதைப் பார்த்தனன். ஆனால்தான் இராஜகுமாரனைக் காட்டிக் கொடுப்பானா? ஸ்காட்சு தேசத்தாருக்கு இராஜவிசுவாசம் மிகவும் சிரேஷ்டமான கடமையல்லவா? ஆகையால் அம்மலை நாட்டான் சட்டென்று, "ஐயா என்னைக்கொல்லாதீர்." என் அரசிளங்குமாரன், பிரின்ஸ் சார்லஸ், இப்பொழுதுதான் வலதுபுறம்போகும் பாதைவழியாய்ச் செல்லுகின்றார். நான்கண்டேன், விரைவில்சென்றால் உடனே பிடிக்கலாம்?" என்றான். சேனைத்தலைவன், "திரும்புங்கள் வலப்புறம்" என்றான். "திரும்பினர் வீரர்கள்" ஸ்காட்சுமலை நாட்டான் புன்சிரிப்புடன், "வலப்பக்கம்! வலப்பக்கம்!! திண்டாடுங்கள் அங்கேபோய்!!! ஸ்காட்சுமலை நாட்டாராகிய நாங்கள் எம் ராஜகுமாரனை அவர்களுக்குக் காட்டிக் கொடுப்பதும் உண்டா!! என்று மனதில் எண்ணிக்கொண்டே அவர்களுடன் பின்தொடர்ந்தான்.

சிறிதுதூரம் போகுமுன்மோல்காம் கூட்டத்தைச்சார்ந்த இன்னுமொரு மலை நாட்டான் வந்தான். அவனையும் சேனைத் தலைவன் பிடித்துக்கொண்டு, "இவனையும் கேட்போம்! இவனும் முன்பேசிய மலைநாட்டான் சொன்னபடியே சொல்லுகிறானா என்று பார்ப்போம்" என்று எண்ணி, "ஐயா எவ்வழிச்சென்றார் அரசிளங் குமாரனாகிய சார்லஸ்? நீ இப்பொழுதுதான் அவரைப் பார்த்தாய் என்பதற்குச் சந்தேகமில்லை· வலப்புறம் போனாரா? அல்லது இடப்புறம் போனாரோ? சொல் உடனே! இல்லையேல், உன்னைக்கொல்வேன்" என்றனன். மோல்காமுக்கு ஒன்றும் தோன்றவில்லை. முன் இவர்களிடம் சிக்கிக் கொண்ட மலைநாட்டான் என்ன சொன்னானோ? நான் அதற்கு மாறாகச் சொல்லி விட்டால், என்ன செய்வது! அவனும் உண்மையைச் சொல்லி யிருக்கமாட்டான்! ஆனால் அவன் சொன்னது எனக்குத் தெரிய

வில்லையே! இந்த உபத்திரவத்திற்கு என்ன செய்வது!! என்று விசாரங்கொண்டு சும்மாவிருந்தான். "பேசுஐயா! நீஎன்ன ஊமையா!—நிற்கின்றாய் மரம் போல்!" என்று கர்ச்சித்தான். உடனே பளிச்சென்று, "எனக்குத் தெரியாது சுவாமி" என்றான். "அடே பயலே! பொய்யுரைக்கின்றாய், என்றான்" என்றான் சேனைத்தலைவன். "முன் நம்மை இப்புறம் அனுப்பிய மலைநாட்டானும் பொய்யனாய்த்தானே இருத்தல் வேண்டும். இருவரையும் முதுகுடன் முதுகு சேர்த்துக் கட்டுங்கள். நமது எதிரியான பிரின்ஸ் எட்வர்ட் இவ்வழி வந்தது பொய்யாகில் இருவரையும் ஒருமிக்கச் சுட்டு விடுங்கள்" என்றான்.

இவ்விருவரையும் கட்டிக்கொண்டிருக்கும்போதேஒரு சிறுகுழந்தைப் பிள்ளை அவ்வழியே வந்தான். அக்குழந்தையைப் பார்த்ததும், காப்டன், "இதோ வருகிறான் உண்மை யுரைக்கும் குழந்தை. 'இளங் குழந்தையும் ஏமாளியும் (அசடனும்) உள்ளத்தை ஒளிக்க மாட்டார்கள்' என்கிறார்களே, ஏபிள்ளாய்! நீ அரசிளங்குமாரன் போவதைப் பார்த்தாயல்லவா?" என்ன—"ஆம், டார்த்தேன்" என்றான் குழந்தை. "எவ்வழிச் சென்றான், சொல்வாய்! இல்லையேல் உன்னுயிரை வாங்குவேன்." என்று கண்களில் நெருப்புப் பொறிபறக்க விழித்துப்பார்த்து, கத்தியையும் கையில் உருவிப் பிடித்துக் கொண்டான்.

சிறுவனுக்கு வயது பன்னிரண்டு இருக்கலாம். மலை நாட்டில்பிறந்து மலை நாட்டில்வளர்ந்த குழந்தை. பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சுமா" என்கிறபடி, இந்த ஸ்காட்சு குழந்தையா இச்சேனைத் தலைவன் கையிலுள்ள கத்தியையும், அவனது கோபம்வாய்ந்த கண்களையும், கண்டு பயப்படப் போகிறான்!! சற்றும் பதட்டமின்றி, சிறிதும் பயப்படாமல், "ஐயா பிரின்ஸ் போனவழி எனக்குத்தெரியும்; உண்மையே? ஆனால் நான் உமக்கு அந்த வழியைச் சொல்லமாட்டேன்." என்றான்.

காப்டனுக்கு உண்டான கோபத்திற்கு அளவுமுண்டோ? அவன்மீசை துடித்தது; கைகால் பதறின. தன் சேனையைச் சுற்றிலும் திரும்பிப்பார்த்தான்; எல்லாரும் நடுங்கினர். தைரியமாய் நின்றவன் பையன் ஒருவனே. "அடே கீழ்ச்சாதிப் பயலே! நீயா என்னைக் கோபமூட்டத் துணிந்தாய்! நான் யாரென்று அறியவில்லைபோ லிருக்கிறது! உன்னை இப்பொழுதே சொல்லும்படி செய்கிறேன்பார்! என்று தன்கத்தியின் பின்புறத்தைத் திருப்பிக்கொண்டு, அதனால் அப்பிள்ளையைப் பலமுறை அடித்தான். அவ்வடியைப் பொறுப்பானா சிறு குழந்தை? சுருண்டு கீழே விழுந்தான். ஓவென்று கூக்குரலிட்டழுதான்!! "உண்மையைச்சொல்" இல்லையேல், உன் தேகத்தை சின்னாபின்னமாய்வெட்டி எறிவேன்." என்று ஓயாமல் அடித்துக்கொண்டே கூவுகிறான் சேனைத்தலைவன். "என்தலையை வேண்டுமானாலும் வாங்கலாம், ஐயா நான் உமக்கு இந்தச் சங்கதியைச் சொல்லமாட்டேன், ஒருக்காலும் இராஜத்துரோகம் செய்யவேமாட்டேன். அரசகுமாரனையா உமக்குக் காட்டிக்கொடுப்பது. நான் ஸ்காட்சு தேசத்தவன்ல்லவா? சார்லஸ் எனக்கு அரசன், அவனுடைய நாயா யிருப்பினும்கூட அவன் போனவழியைக் காட்டமாட்டேன்" என்று கதறினான்.

இத்தகைய இராஜ விசுவாசம் நிறைந்த வார்த்தைகளைக் காப்டன் கேட்டதும், அவனுக்கே வெட்கமாய்ப் போயிற்று! தலையிறங்கினான். கத்தியை உறையிற் போட்டுவிட்டுக் குழந்தை முகத்தைப் பார்த்தான். சேனைத் தலைவன் கண்களில் நீர் நிரம்பிவிட்டது. சிறுவனைப்பார்த்து, "ஏ குழந்தாய்! போதும், என்னை மன்னிப்பாயாக,—நீதான் இராஜ விசுவாசி,—" "வீரர்களே நடவுங்கள்! நம்மால் கூடியமட்டும் நாமே தேடுவோம்." "வீரத்தன்மை பொருந்திய சிறுவனே! என்னை நீ நினைக்கும் பொருட்டும், உன் குறைவிலா ராஜவிசுவாசத்துக்கும் அடையாளமாக இதை வைத்துக்கொள்." என்று ஒரு வெள்ளிச் சிலுவையைக் குழந்தையிடம் கொடுத்துவிட்டு, மற்ற இரு மலைநாட்டரையும் அவிழ்த்துவிட்டு மேற்சென்றான்.

இன்னும் அச்சிறுவனுடைய ஸந்ததியார் தங்கள் உண்மைக்கும், இராஜ விசுவாசத்திற்கும் அறிகுறியாய், அவ்வெள்ளிச் சிலுவையை வைத்துக்கொண்டிருக்கிறார்களாம்.

இக் கதையைப் படிக்கும் சிறுவர்காள்! நமது சிறு ஸ்காட்ச் பிள்ளையிடமிருந்து நாம் முக்கியமாய் அறியவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. அது மிகச் சிறந்தபாடம். நாம் எல்லாரும் இராஜவிசுவாச முடையவராய் இருத்தல் வேண்டும். எக்கஷ்டம்வரினும் அரசனைக் கைவிடலாகாது. அவனை விரோதிக்கவும்கூடாது. அரசனிடம் நன்றியில்லாதவர் நாசமடைவார்கள்!! இக்கருத்துக்கொண்டே பெருவாயில் முள்ளியார் ஆசாரக் கோவையில்,

"அரசனு வாத்தியான் தாய்தந்தை தம்முன்
நிகரில் குரவரிவர் இவரைத்
தேவரைப் போலத் தொழுதொழுக வென்பதே

யாவருங் கண்ட நெறி" என்றுசொல்லி யிருக்கிறார். யாரை முதலில் வைத்து இருக்கிறார் பார்த்தீர்களா? அரசனை அல்லவா? என்னையோவெனின் மற்றெல்லாரினும் அரசனே பெரியோன், என்பதைக் காட்டவும், அவனால்தான் நாம் வாழ்வது என்பதை விளக்கவும்தான். ஆகையால் உங்களுக்கும் இளம்பிராய முதலே இராஜ விசுவாசம் மேல்மேலும் ஓங்கி வளரவேண்டும்.

ஆர். கே. ஸ்வாமி, பி.ஏ. எல்.டி.

சில கருத்துகள்.

எல்லா மனிதர்களைப்போலவே உன்னையும் சிருஷ்டித்திருப்பதால் உன்னால் அபிவிர்த்திக்குக்கொண்டு வரக்கூடிய சக்திக்கு வரையறையில்லை.

எதையும் குறையின்றிச்செய்து முடிக்கும் பரிபூர்ண நிலைமையை நாம் இருவருமே யடைவோமெனின் அது மிகப்பெரும் துன்பத்தைவிளைக்கும்; அதாவது ஏனைய மனிதர்கள் தாம் செய்யுங்கருமம் ஒன்றேனுமிலராய் கொன்னே பிறந்தவராவர் ஆகவே நமது அறிவின் குறைவே பிறரின் சீர்த்திக்கு இடமாய் நின்றுள்ளது.

நாம் நினைப்பவையெல்லாம் தொற்று வியாதியைப்போல் நம்மிடம் வந்தொட்டுவதால் நாம் நம்முடைய மூளையை இழிவான எண்ணங்களுக்கு இட

ங்கொடாது காப்பதுமேலாம். ஏனெனின் நமது நல்லெண்ணங்களே இவ் வாழ்க்கையின் பயனைத் தருவனவாகும்.

எதையும் உன் உறுதிப்படி செய்வதே கருமம். அது தவறாய் முடியின் அம்முடிவின் பயனால் திருந்திக்கொள்க. அங்ஙனமின்றி பிறர் கருத்தின்படி நடப்பின் உனது உறுதிப்பாடு சிதைவதோடு, உன் கவுரவமும் குறைவு பாடடையும்.

"ஜயமடைவேன்" என்றுள்ளிற்கொள்ளாது ஒருவனும் ஜயமடைந்ததில்லை. தன்னைத்தான் சக்தியற்றவன் என்று கருதி ஊக்கமற்றுக்கிடக்கும் ஒவ்வொருவனும் தான் எண்ணியவாறே ஆய்விடுகிறான். ஆதலின் உன் சக்தி சிறியதெனினும் "ஜயமடைவேன்" என்று எண்ணித்துணிவாயாகில் நீ எடுத்த காரியம் கைகூடும் என்பதற்கையமில்லை.

☞ எஸ். பொன்னம்மாள்.

சிறுவர்க்கான கதைகள்.

ஓர் அம்பட்டன், ஒரு வைத்தியனிடத்திற் சென்று, வைத்தியரய்யா, என்வயிற்றில் கொஞ்சம் வலி யிருக்கிறது, தயவுசெய்து மருந்துதந்து குணமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டான். வைத்தியன் அம்பட்டனைப் பார்த்து, இன்று, நீ என்ன ஆகாரம் உட்கொண்டாய் என, நோயாளி, அய்யா அதிகமாய் ஒன்றும் சாப்பிடவில்லை; ஆனால் ஒருகரிந்த ரொட்டியைத் தின்றேன் என்றான். வைத்தியன் கேட்டு, முதலில் உன் கண்ணிற்கு மருந்து போட உத்தேசித் திருக்கிறேன், அதற்கு நீ என்ன சொல்லுகிறாய் என்றான். நோயாளி, கண்ணிற்கு மருந்துபோட வேணுமென்றதைக் கேட்டதும் ஆச்சரியத்துடன் வைத்தியரே, வயத்தின்வலிக்கு, கண்ணில் என்ன சம்பந்த மிருக்கிறதென்று வினவினான். வைத்தியன், ஏனென்றால் முதலில் உன் கண்ணிற்கு மருந்துபோட்டு கண் தெளிவடைந்தால், பிற்பாடு நீ, ஒருபொழுதும் கரிந்துபோன ரொட்டியைத் தின்னமாட்டாய் என்று மறுமொழி கூறினான்.

பிச்சைக்காரன் ஒருவன், ஒரு லோபியினிடத்திற் சென்று, ஏதோ, தான் கேட்பதை அனுசரிக்க வேண்டுமென்று மிகவும் வணக்கத்துடன் கேட்டுக்கொண்டான். லோபி, பிச்சைக்காரன் சொல்வதைக்கேட்டு, சற்று ஆலோசித்து, ஏ! பிச்சைக்காரா, நீ சொல்வதை நான் அனுசரிக்க வேண்டுமானால், முதலில் நான் சொல்வதை நீ கேட்கவேண்டும்; அதாவது நீ ஒருபொழுதும் என்னிடத்தில் எதையும் யாசிக்கக்கூடாது, அதுவே எனது விருப்பம், அதைத்தவிர, நீ எதைச் சொல்லுகிறாயோ, அவ்வண்ணம் கேட்கத்தயாரா யிருக்கிறேன் என்றான்.

ஓர் ஏழைமனிதன் மிகவும் பசியினால்வருந்தி, ஒரு நியாயாதிபதியினிடத்திற்போய், ஏதாவது சாப்பிடக் கொடுக்கும்படி கெஞ்சிக்கேட்டான்.

மிகவும் கடின சித்தத்தையுடைய நியாயாதிபதி, ஏ மனிதா! இது நியாயாதிபதி வீடாயிருப்பதால், நியாயத்தைத்தின்று வயிற்றை நிறைத்துப்போ என்று சொல்லிவிட்டான்.

ஒருவன் தன்னுடைய ஒட்டகம் களவுபோனதைக் கண்டு, அதைத் தேடாமல், ஓரிடத்தில் உட்கார்ந்து தெய்வத்தைப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தான். அப்பொழுது ஒருவன் அவனருகிற் சென்று எதற்காக பிரார்த்தனை செய்கிறாய், என்று கேட்டான். அவன் மறுபடி சொன்னதாவது; ஏனென்றால், என்னுடைய ஒட்டகம் களவுபோயிற்று. நான் அதின் மேல் சவாரி செய்திருந்தால் நானும் ஒட்டையின்கூட களவுபோயிருப்பேனல்லவா? ஆதலால், நான் அதின்மேல் சவாரி செய்யாம லிருக்கும்படி புத்தி கொடுத்ததைப் பற்றி தெய்வத்தைப் பிரார்த்திக்கிறேன் என்றான்.

எஸ். போன்னம்மாள்.

விநோதமான நட்பு.

ஒருநாள் ஓர் நாய் தெருவில் கிடந்திருந்த ஓர் ஆமையோட்டைப் பார்த்து அதற்குள் ஓர் ஆமைக்குட்டி யிருந்தது தெரியாமல், ஒரு பெரிய எலும்பு அகப்பட்டதென்று நினைத்து அதைச் சாவகாசமாய்க் கடித்துத் தின்ன வேண்டுமென்று அதைத் தன் வீட்டுக்குக் கொண்டுபோயிற்று. அங்கே சென்று அதைக் கீழே வைத்தவுடன் அதிலிருந்த ஆமைக்குட்டி யொன்று வெளியேவந்து நடக்க வாரம்பித்தது. தான் எலும்பென்று நினைத்த வஸ்துவில் ஒரு பிராணி யிருக்கக்கண்டு அந்த நாய் அதிக வியப்புற்று அந்த ஆமையினிடத்தில் மிக்க அன்புவைத்து, அன்றுமுத லதற் குணவளித்து அதை விசுவாசத்துடன் வளர்த்துவந்தது. அந்த ஆமைக்கும் நாயினிடத்தில் மிகுதியான அன்புண்டாகி அவை இரண்டும் இணைபிரியா நட்புற்றன. இப்படியிருக்கையில், நாய்க்கேதோ நோய் கண்டதினால், அதை மிருக வைத்திய சாலைக்கு அனுப்பினார்கள். அப்பிரிவைச் சகியாமல், ஆமை சரியாய் ஆகாரங் கொள்ளாமல் எப்போதும் விசனமுற்றிருந்து நாளுக்கு நாள் மெலிவடைந்தது. ஆமையையும் வைத்தியசாலைக் கனுப்பினார்கள். அங்கே அதற்குப் பலவித சிகிச்சை செய்தும் குணமாகாமற் போகவே, அதன் எஜமானன் நாயினின்றும் பிரிந்திருக்கிறதினால் அது அப்படி விசனமுற் றிருக்கிறதோ வென்னமோ பார்ப்போமென்று, அதை நாயிருக்கு மிடத்திற்குக் கொண்டு போய் விடும்படிச் சொன்னார். அதைக் கேட்டவர்க ளெல்லோரும் நகைத்தார்கள். அவர்களுடைய ஏளனத்தை யவர் கவனியாமல் அவசியம் கொண்டுபோக வேண்டுமென்று சொல்லவே, அவர்கள் அப்படியே செய்தார்கள். நாயைச் கண்டதும் அந்தச் சிறிய ஜெந்து தன் சந்தோஷத்தைக் காண்பிக்கும்பொருட்டு அதனால் எவ்வளவு உரத்திக் கத்தமுடியுமோ அவ்வளவு உரத்திக் கூச்சல்போட்டது. நாயும் அதன் தோழனைத் தழுவி முத்தமிட்டது. அன்றுமுதல் அந்த ஆமையை நாயினிடத்திலிருந்து பிரிக்காமல் நாய்க்கு சவுக்கிய மாகிறவரையில் அதையும் அதனுடன் கூடவே வைத்திருந்தார்கள். ஆமை ஒரு மருந்து மில்லாமலே நாளுக்குநாள் வலிவடைந்து விட்டதாம்.